மாணவிகளே! சிறிது சிந்தியுங்கள்! தொன்றுதொட்டு நமது பாரதத்திற்குக் கடவுளால் அளிக்கப்பட்ட ஓர் இணையற்ற செல்வமென்ன? இயற்கையன்றி வேறுண்டோ? கலைச் செல்வமா? அல்லது திருச்செல்வமா? இரண்டுமில்லை. பின் ஏன் தயங்க வேண்டும்? உங்களால் இயன்ற வரையில் இயற்கையன்னையைப் போற்றுங்கள். இவற்றையே நமது கடமைகளாகக் கொள்ளுங்கள். ஆயிரக்கணக்கான ஆண்டுகட்கு முன்பே வாழ்ந்த நம் மூதாதையர் பிழைத்து வந்ததற்கு ஏதுவாயிருந்தது இயற்கையல்லவா? எங்கும் பரந்து கிடக்கும் நிலக் கடலைப் படைத்துப் பிழைக்க வழியளித்த கடவுள் மக்கட் பேற்றைப் பிழைக்கச் செய்ய, பயன் படுத்திய சாதனம் இயற்கையல்லவா? காட்டிலே பல மரம் மட்டைகளை அமைத்து, விலங்குகளோடு மானிடரையும் வாழ்வித்த பெருமை யாருக்குரியது? இயற்கையன்னைக்கல்லவா? சகோதரிகளே! மேற்கூறியவற்றில் ஏதேனும் உங்களால் மறுக்க முடியுமா?

மேலும் பல்லாயிரக் கணக்கான மைல்களுக்கப்பாலுள்ள கிரீஸ் தேசத்தவரை வசீகரித்த புகழிற்குரியது இயற்கையல்லவா? இன்றைய இந்தியா உரிமைக் கதிர்களுடன் மறுபடி தலையெடுக்கச் செய்த பெருமை இயற்கைக்கே உரியது என்பதில் ஐயமில்லை. இன்றுமட்டுமா? இந்தியா பொன் கொழிக்கும் வளநாடாக இருந்தது எதனால்? எக் காரணம் கொண்டும் இந்தியாவின் இயற்கை வளத்தை மறுக்க முடியாதென்பதை உறுதியாகக் கூறுகின்றேன். அன்றைய சங்கப் புலவர்களாலும் இயற்கை போற்றப்பட்டு வந்ததில் வியப்பில்லை. சங்கப் புலவர்களது ஒவ்வொரு பாடலிலும் இயற்கையன்னை குடிகொண்டுள்ளாள். இயற்கை வளத்தையும் போற்றுதவர் உண்டா? இயல், இசை, நாடகம் எனும் முத்தமிழிலும் இயற்கைப் பொருளே குவிந்து கிடக்கின்றன. அகன்ற கடலும், தாவரவர்க்கமும், அடர்ந்த காடுகளும் மனதிற்கு அனுமதி பயப்பனவாயுள்ளன. இயந்திரத்திற்கொப்பான மானிட சரீரம் களைத்துவிடின் அவற்றிற்கு அமைதி தந்து செப்பனிடும் வேலையை இயற்கை செவ்வையாகச் செய்கிறது.

கொடைக்குப் பெயர்போன பாரிவள்ளல் முல்லைக் கொடிக்குத் தேரளித்ததில் வியப்பில்லை. அன்னையின் அரும் பண்புகளை உணர்ந்தே அவர் அவ்வாறு செய்திருக்கக் கூடும்.

தமிழ் வளர்ந்த

மதுரையில்

தொழில் வளம்

டி. வி. சுந்தரம் அய்யங்கார் & ஸன்ஸ் லிட்,

மதுரை.

கிராமங்களில் நிலவும் அமைதிக்குக் காரணம் அதன் இயற்கை வளம் என்பது சொல்லாமலேயே விளங்கும். கண்டோர் மயங்கும் பச்சை நிறம் படர்ந்த வயல்கள், உள்ளத்திற்கும் உடலுக்கும் ஊக்கமளிக்கும் இனிய தென்றல், யாவற்றிற்கும் மேலாக அங்கு காணப்படும் அமைதி, இவையே மக்களின் மனக்கவலையை யகற்றி மகிழ்ச்சியுடன் விளங்கும் வீரர்களாகச் செய்யவல்லது. நகரத்தின் கோலாகலம் இங்கு இல்லையெனினும், இயற்கையின் எழில் நிறைந்துள்ளது. அவ்வியற்கையிலேயே தவழ்ந்து விளையாடும் மக்கள் தான் உரமுள்ளவர்களாகத் திகழ்கின்றனர். விஞ்ஞானம் அளிக்காத மருந்தை இயற்கை அளிக்கிறது.

அன்று காந்தியடிகள் பெண்மணிகளுக்கிடையில் சொற்பொழி வாற்றிய பொழுது, தாய் நாட்டின் தளையை நீக்கத் தனையர்களது தயைமிகுந்த தர்யாகவும்விளங்கிய–இலட்சுமிபாயைக் குறித்து, "அவளன்றோ பெண்மணி?" எனக் கூறினர். அது போல, இச்சமயம் நமது இயற்கை அன்னையைப் பற்றிக் கூறும் பொழுது "இயற்கைக் குண்டோ இறுமாப்பு"? எனக் கூறத் தயங்குதல் அழகாகுமோ? பொறுமை எனும் பொற்றணியைப் பூண்டுப் பொலிவு பெறச் செய்யும் "அவளன்றோ அன்னை ?" எனக் கூறுவது தவறாகாது. எவ்வித உயிர்ப் பிராணிகட்கும் தனது தாவரச் செல்வங்கள் மூலம் நன்மை பயப்பது இயற்கை. பாடுபட்டு ஊணைத்தேடிச் சேகரித்துப் பிராணிகட்கும் பயன்படக் கூடிய வகையில் தம் உடல், பொருள், ஆவி அனைத்தையும் இழக்கச் சித்தமாயிருக்கும் நம் அன்னையின் பொறுமை போற்றத்தக்க தன்றோ? தனயனுக்குத் தாய் செய்யும் தியாகத்தைத் தோற்கடிப்பது நம் அன்னையின் தியாகம். உலகிலுள்ள உயிர்களைப் பிழைப்பூட்டும் முயற்சியில் தன்னைத் தியாகம் செய்யத் துணிந்துள்ள இயற்கையின் சேவையைத் தியாகம் எனக் கூறுவதா? அல்லது தனயன் பேரில் தயாளம் எனக் கூறுவதா ?

வருங்காலச் சிந்தனைச் சிற்பிகளே! இன்றும் நாம் இயற்கையைப் போற்ற, வனமகோற்சவம் போன்ற பல பண்டிகைகளையும் கொண்டாடுகிறோம், நமது நாட்டிலே பழந்தமிழ்ப் பண்பாடுகளைக் கொண்டுள்ள மதுரை, திருச்சி போன்ற பல தென்னாடுகளிலும் இயற்கையின் பரிபூரணமான பிரதிபலிப்பைக் காணமுடியும். மதுரையிலே கோயில் கொண்டுள்ள மீனாட்சி அம்மனின் பிரகாரச் சிற்பங்களும், திருச்சி மலைக்கோட்டைச் சிற்பங்களும் இயற்கைக்கு ஓர் எடுத்துக் காட்டாக விளங்குகிறது. வீரத் தமிழ் மன்னன் தேசிங்கின் தலைநகரான செஞ்சியின் அழகை எவ்வாறு வருணிப்பது? கோட்டைக்கு எதிரிலே தாவர வகைகளைக் கொண்ட ஒரு மலையானது அங்கே ஒரு பசுங் கொண்டல் படுத்துறங்குவது போல் காட்சியளிக்கின்றது. இவ்வாறு மானிடர் மனதிற்குச் சுகம் தரும் இயற்கையைப் போற்றுவது நம் கடமையாகும். அன்று போல் என்றென்றும் பாரத நாடு தன் வளத்திற் குறையாதிருக்குமாறு யாவரும் இயற்கை அன்னையைப் போற்றித் துதிப்போமாக!

ஜி. மீனாட்சி,
(ஐந்தாம் படிவம் 'அ' பிரிவு).

CHOICEST SELECTIONS

ARE

AVAILABLE IN EVERY ATTRACTIVE

AND

LATEST DESIGN

IN

CLOTHINGS

for

LADIES, GENTS AND

CHILDREN

AT YOUR FAVOURITE SHOP

THE

MADRAS SWADESHI EMPORIUM LTD.,

MOUNT ROAD,

MADRAS 2.

PHONE : 84079

தமிழ்ப் புலவர் டி. கே. சி

"எண்ணிய பிறவிதனில் மானிடப் பிறவிதான்
யாதினும் அரிதரிதுகாண்.
—தாயுமானவர்.

இத்தகைய சிறந்த மானிடப் பிறவியைப் பெற்றுள்ள நாம் நம்மிடையே திலகமாயிருந்து மறைந்த ரஸிகமணி டி. கே. சி. யைப்பற்றி அறியாமலிருத்தல் அறிவீனமாகும்.

திருநெல்வேலி ஜில்லாவிலே 1882-ஆம்ஆண்டிலே அறிவுக்களஞ்சியமான அண்ணல் அவதரித்தார். தென்காசியிலே தன் பள்ளி வாழ்க்கையைப் பயனுறக் கழித்தார். திருச்சிசியிலுள்ள செயின்ட் ஜோஸப் கல்லூரியிலும், சென்னை கிருஸ்துவக் கல்லூரியிலும் படித்துப் பட்டம் பெற்று, பின் சட்டக் கல்லூரியிலே படித்துப் பட்டம் பெற்றார். 'விளையும் பயிர் முளையிலே' என்பதற்குச் சான்றாக இளவயதிலேயே தமிழ் நாட்டுப் பாடல்களிலும், செய்யுளிலும் சிறந்த ஆர்வம் காட்டினார்.

இவர் தமது 30-வது வயதிலே கம்பராமாயணத்தை ஆழ்ந்து படித்து அக்காவியத்தின்கண் காணும் அழகு, சொல்நயம், பொருள் பொலிவு ஆகியவற்றை ஆராயலானார். சென்னை லெஜிஸ்லேடிவ் கவுன்ஸில் அங்கத்தினராய் இருக்கும்போது தமிழ் இலக்கியச் சங்கத்தின் சார்பாக கம்பரது காவியங்களைப்பற்றி ஒரு சொற்பொழிவாற்றி அவரது அருமை பெருமைகளை எடுத்துரைத்தார். அதைக் கேட்ட ஆங்கிலம் கற்ற பலர் தமிழின் பெருமையையும் பண்பாட்டையும், அவர் விரித்துரைக்கும் விதத்தினைக்கண்டு அவரை நாடினர். அவர் செய்யுள் தற்காலப் புலவரான தேசிகவிநாயகம் பிள்ளை, பாரதியார் ஆகியவர்களைப்போன்று, இளகி ஒளிரும் வெண் பொன் ஒழுக்கும், இனிய ஓசையும், திட்பமும், சுவையும் உடையது. இதைத்தவிர்த்து இவர் தமிழ் நாட்டின் பழங்கலையான பரதநாட்டியத்தின் மறுமலர்ச்சிக்கு வழி காட்டியாய் இருந்தார். நம் இலக்கியத்தில் காணும் பண்டைத் தமிழகத்தின் பண்பாட்டையும், கோயிலில் காணப்படும் குறைவிலா சிற்பங்களையும் பாதுகாக்கும் கடன், தமிழராகிய நம் கடன் எனவும் கூறினார்.

சனிக்கிழமை 31-10-53 அன்று நடைபெற்ற மாபெரும் சம்பவம் தமிழரால் மறக்க முடியாதது. சிதம்பரநாத முதலியார் தம் நண்பர் ராஜாஜியின் விருப்பப்படி கம்பராமாயணத்தைக் குற்றாலநாதர் சன்னிதியில் ராஜாஜியின் தலைமையில் அரங்கேற்றினார். ஆரம்பிக்குமுன் "கம்பராமாயணம் இங்கு அரங்கேறுகிறது இது தமிழர் உள்ளத்திலும் அரங்கேற வேண்டும்" என்றார் ராஜாஜி. முதலியாரவர்கள்,

"இம்பர் நாட்டில் செல்வம் எலாம்
எய்தி அரசாண்டிருந்தாலும்
உம்பர் நாட்டில் கற்பகக்கா
ஓங்கும் நிழலில் இருந்தாலும்
செம்பொன் மேரு அனைய புகழ்
திறல்சேர் இராமன் திருக்கதையில்
கம்பநாடன் கவிதையில் போல்
கற்றோர்க்(கு) இதயம் களியாதே."

நாங்கள்

காமிரா கொடுப்போம்

உங்கள்

இஷ்டப்படி

போட்டோ எடுங்கள்

போட்டோ பயிற்சி பெற உதவுவோம்

க்ளீன் & பெய்ரல்,

30, மவுண்ட் ரோட்,

சென்னை 2.

இத்தகைய சிறந்த செய்யுளைப் பாடியிருந்தார் என்று அறியும்போதே அவரது தமிழ்ப் புலமை சொல்லாமலே விளங்கும்.

அங்குக் கூடியிருந்த மாபெரும் கூட்டத்தையும், குற்றாலத்தை வந்தடைவதிலுள்ள பிரயாண சிரமங்களையும் ஒப்பிட்டுப் பார்த்தபோது டி. கே. சியின் இலக்கியத் தொண்டின் பெருமை சட்டம் போட்டு காண்பித்ததுபோல் புலனாகியது. 'யான் பெற்ற இன்பம் பெருக இவ்வையகம்' என்ற உயர்ந்த குறிக்கோளோடு கவிதாரஸானுபவத்தை இரவும், பகலும், நோயுற்றபோதும் சென்ற 60 ஆண்டுகளாக அள்ளிச் சொரிந்திட்டதன் பயனல்லவா இவ்வளவு அன்பர்களை அங்கேகூட்டிவைத்ததுஎன்றெண்ணி வியக்காமலிருக்க முடியாது.நம்நாட்டு இதிகாச நூல் இராமாயணம், மகாபாரதம். இதைப் பாதுகாத்தல் பொறுப்புள்ள கடனாகும். இராமர் கதை பாரதநாட்டின் பாக்கியம். அதைத் தமிழில் கம்பர் அருங்காவியமாக எடுத்தியம்பியிருப்பது தமிழர் செய்த பாக்கியம். கம்பர் கவிஅழகை எடுத்துக்காட்டுதற்கு டி. கே. சியைப் பெற்றிருப்பது நாம் செய்த பாக்கியம்.

இவர் முத்தொள்ளாயிரம் நூலையும் இதய ஒளி ஆகிய கட்டுரைகள் கொண்ட நூலையும் வெளியிட்டுள்ளார் கல்கியில் 'கம்பர் தரும் காட்சி' என்ற தலைப்பில் இராமாயணத்தின் அரிய கருத்துக்களைப் பாமரர்படிக்கும் வண்ணம் எளிய நடையில் எழுதியுள்ளார். தமிழன்னைக்கு அணிகள் அணிவித்து அழகைப் பெருகச் செய்த பெருமை இவரையே சாரும்.

இம்முதிய பிராயத்தில் ரஸிகமணியின் நீடித்த தமிழ்ப் பணியைத் தமிழ் நாட்டிலுள்ள தருமபுரம், திருவாடுதுறை ஆகிய சைவமடங்களும் நாங்குனேரி, திக்குறுங்குடி ஆகிய சமண மடங்களும் பாராட்ட முன்வந்ததைப் பாராட்டவேண்டும்.

"முடிசார்ந்தமன்னரும் மற்று
முள்ளோறும்
பிடிசாம்பராய் வெந்து மண்ணா
வாரே."

—பட்டினத்தார்.

பிப்ரவரி 16ஆம்தேதி செவ்வாய்க்கிழமை மக்கள் முகத்திலே ஏக்கத்தின் தேக்கம். தமிழுலகமே துயரக் கடலில் மூழ்கிக்கிடந்தது. தமிழன்னை தம் தவப்புதல்வனை இழந்து துயரம் தோய்ந்த முகத்துடன் தோற்றமளித்தாள். இப்படித் தமிழுலகம் துடிக்கும் நிலையிலே உயர்திரு டி. கே.சி. தேவர் உலகை ஆளும்பொருட்டு பூதஉடலை விட்டுப் புகழுடம்பெய்தினர்.

"ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும் மாண்டார் வருவரோ." இதையறிந்தும் மக்கள் நீக்கமுடியாத் துயரிலே நீந்துகின்றனர். மைந்தனை இழந்த தமிழ்த்தாயைத் தேற்றுவதெப்படி? தேற்றுவார் தான் யார்? தமிழர் தம் உயர்ந்த தலைவரை இழந்து தவிக்கின்றனர். தமிழ் எழுத்துக்கள் யாவும் தம்மை அழகுற அமைப்பவரைக் காணாது கண்கலங்கி நிற்கின்றன. என் செய்யமுடியும்?

இத்தகைய தமிழ்த் தலைவரை இழந்த நிலையில் நிற்கும் நாம் அவரது அரும்பெரும் மொழிகளைக் கடைப்பிடித்து வாழ்வை வளமாக்கிக் கொள்வதே நம் அவருக்காற்றும் அரிய செயலாம். அத்தகைய தமிழ்த் தலைவரது ஆன்மா சாந்தியை அடைய இறைவனை இறைஞ்சுவோம்.

தமிழ்ப்புலவர் டி. கே. சியின்ஆன்மா
சாந்தியடைவதாகுக.

"தோன்றிற் புகழொடு தோன்றுக;
அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று."

K. V. **தாக்ஷாயணி,**
(ஆறும் படிவம் 'அ' பிரிவு.)

பள்ளித் தலைவி தேர்தல்

பால மணம் மாறுப் பாலகிகளாகப் பள்ளிப் படியினை மிதித்த அன்று தொட்டு, பலவும் கற்ற பாவையர்களாய்ப் பள்ளிப் படிப்பிற்குப் புள்ளி வைத்துவிட்டுக் கல்லூரி கல்வி கற்க காலடி எடுத்து வைக்கப்போகும் நாள் வரை பல இரசமான சம்பவங்களைக் கடக்கின்றோம். அவற்றுள் எவ்வளவு முயன்றாலும் எண்ணத்தினின்றும் அகலா நிகழ்ச்சி யொன்றில் முதலாம் படிவத்தில் அடிவைத்த ஆண்டுமுதல் ஒவ்வொரு ஆண்டும் பங்கு கொள்கிறோம். அது யாது? இந்த வினவிற்கு எந்த மாணவியும் எளிதில் விடை பகன்று விடுவாள். அதுதான் பள்ளித் தலைவி தேர்தல். இங்கு யான் இவ்வருடத் தேர்தலைப் பற்றி இயம்பப் போகின்றேன்.

இவ்வருடமும் வழக்கம்போல், ஐந்தாம் படிவத்தின் ஒவ்வொரு பிரிவினரும் தங்களுள் தலைசிறந்த ஒருத்தியைத் தங்கள் தங்கள் பிரிவினின்றும் தேர்ந்தெடுத்து, தேர்தலில் போட்டியிடச் செய்தனர். நம் தேசியக் கொடியில் திகழும் மூவர்ணங்களுமே அவர்கள் மூவரின் சின்னம். முதல் பிரிவினின்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட சுசிலா வெள்ளைப் பெட்டியின் அபேட்சகி ஆனாள். மற்ற இரு பிரிவுகளினின்றும் முறையே கமலா ஆரஞ்சுப் பெட்டியின் அபேட்சகியாகவும்; பல்குமணி பச்சைப் பெட்டியின் அபேட்சகியாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

தேர்தல் வாரம் இரண்டு. முதல் வாரம் அமைதியான பிரசார வாரம்.

For

STATIONARY ARTICLES-TEXT BOOK-TOILETS.

Please pay a visit to:

V. N. RAJAN & CO.,

BOOK SELLERS, STATIONERS & GENERAL MERCHANTS,
CONTRACTORS & COMMISSION AGENTS,
108, PURASAWALKAM HIGH ROAD, MADRAS 7.

LADY WILLINGDON HIGH SCHOOL BOOK STALL
IS RUN UNDER THE EFFICIENT MANAGEMENT OF
MESSRS. V. N. RAJAN & CO.,

Proprietor:
M. CHANDRASEKARAN.

அவ்வாரம் மாணவிகள் தங்கள் கைத் திறன் அனைத்தையும் வெளிப்படுத்தி, தங்கள் வகுப்புச் சகோதரியின் வெற்றியை வேண்டி வறிதே காணப்படும் வெள்ளைச் சுவர்களையெல்லாம் 'தயவு செய்து உங்கள் ஓட்டுக்களை............ பெட்டியில் போடுங்கள்.' என்று பல மொழிகளிலும், பலவகைகளிலும் சிறப்பத்துடன் சித்தரித்துச் சிந்தையைக் கவர்ந்தனர். ஆங்காங்கே மரத்தடிகளில் தங்கள் அபேட்சகியின் மாண்புகள் மாணவிகளின் மனதில பதியுமாறு கூட்டம் கூட்டிப் பேசினர். அழகிய அட்டைகள் கண்களையும், கருத்தையும் கவர்ந்தன.

ஆரம்பமானது அடுத்தவாரம் ஆரவார பிரசார வாரம். ஒவ்வொரு வகுப்பினருக்கும் ஒரு தனிப் பிரசார தினம் அளிக்கப்பட்டது. ஒவ்வொரு பிரிவினரும் தத்தம் தினத்தன்று உரிய வர்ணத்தினுல் உவகையூட்டும் வண்ணம் மேடையை அலங்கரித்தனர். முதல் தினம் பல்குமணிக்கு உரியது அன்று மேடைமீது பச்சை உடை அலங்காரிகள் பலர் தோன்றி பல்குமணியின் பண்புகளைப பற்றிப் பேசினர். பாடல்கள் பாடப்பட்டன. பல்குமணியே பள்ளித் தலைவியாகுவதற்குரியவள் என்று பாவையர்கள மனதில் பதியப் பாடுபட்டனர். இடைவேளைகளிலெல்லாம் பல்குமணிக்கு, பச்சைப் பெட்டியில் ஓட்டளியுங்கள் என்று பொறிக்கப்பட்ட துணியைத் தாங்கி கோஷமிட்ட வண்ணம் பள்ளியை வலம் வந்தனர்.

இரண்டாம் தினம் வெள்ளைப் பெட்டிக்குரியது. சுசிலாவின் சகோதரிகள் வெண்மைஉடைச் சுந்தரிகளாகத் தோன்றினர் சுசிலாவின் சிறப்புகள் சிறந்த முறையில் விளக்கப்பட்டன. கன்னிகள் கீதங்களைப் பொழிந்தனர் வெள்ளைப் பெட்டியின் அபேட்சகியே தலைவிப் பதவிக்குரியவள் என்று வெள்ளை உள்ளம் வாய்ந்த வனிதையர்களின் எண்ணத்திலே புகுத்தி, வெள்ளைப் பெட்டியின் வெற்றிக்கு வேண்டினர் வெள்ளைப் பெட்டிக்கு ஓட்டளிக்குமாறு 'ஆர்ட்' தாளில் அச்சடித்து அனைவருக்கும் வழங்கினர். 'சுசிலாவிற்கு ஓட்டளியுங்கள்' என்று கோஷமிட்டுக் கொண்டு, வேண்டுகோள் அடங்கிய 'கிளாவர்' வடிவ அட்டையைத் தாங்கிய வண்ணம் பள்ளியைச் சுற்றி வந்தனர்.

இறுதி தினம் கமலாவிற்கு. ஆரஞ்சு உடை அணங்குகள் அநேகர் ஆரஞ்சுப்பெட்டி அபேட்சகியே அப்பதவிக்கு அருகதையுடையவளென்று அறிமுகப்படுத்தினர் 'கமலாவிற்கு ஓட்டளியுங்கள்' என்று எழுதிய துணியுடன் கூக்குரலிட்ட வண்ணம் வலம் வந்தனர். மூவரில் முதன்மையான வளைத் தேர்ந்தெடுப்பது மிகவும் சிக்கலாகி விட்டது.

மறுதினம் தேர்தல்நாள். காலையில் பிரார்த்தனைக்குப் பின் தேர்தல் விதிகள் அறிவிக்கப்பட்டன. வாக்காளர்கள் முதலாம் படிவம் முதல் ஆரும் படிவம் வரை உள்ள மாணவிகள் அனைவரும் ஆவர். ஓட்டளிக்கும் அறை உயர்நிலைப்பள்ளிக்கு மேலேயும், கீழே நடுநிலைப் பள்ளிக்கும் அமைக்கப்பட்டது. தேர்தல் நேரம் பகல் ஒரு மணி முதல் மூன்று மணி வரை. அவரவர் வாக்குரிமையினைத் தங்களுக்குத் தகுதி உடையவளாகத் தோன்றும் அபேட்சகியின் பெட்டியிலளித்துவிட்டு, முடிவைச் செவியுற அடங்கா ஆவலுடன் காத்திருந்தோம். பெட்டிகள் தலைமை உபாத்தினி

அறைக்கு எடுத்துச் செல்லப்பட்டு. தேர்தல் உத்தியோகஸ்தர்களால் எண்ணப்பட்டன. அமைதியற்ற உள்ளத்துடன் காத்திருந்த அணங்குகளுக்கு முடிவை அறிவிக்கத் தலைமை ஆசிரியை மேடையில் தோன்றினர். முடிவை அறிவித்தனர்

சுசிலா அறுபது ஓட்டுக்கள் அதிகம் அடைந்து பள்ளித் தலைவியானாள். கமலா, முப்பது ஓட்டுக்கள் அதிகம் எடுத்து உதவி தலைவியானாள். பல்குமணி மூன்றுவதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டாள். மூவரும் மேடையில் தோன்றினர். அனைவரும் ஆனந்தக் கடலில் மூழ்கினர். பள்ளி மாணவிகளின் திறமையை வெளிப்படுத்த ஓர் அறிய சந்தர்ப்பத்தை அளித்த இத்தேர்தல் இத்துடன் முடிவடைந்தது.

ஆ. பிரேமா,
(ஆறும் படிவம். 'அ' பிரிவு.)

காப்பி எதற்காக ?

காப்பி எதற்காக நெஞ்சே ?
காப்பி எதற்காக ?
கையில் சுக்குடன் மல்லி இருக்
கையில்
காப்பி எதற்காக ?
தீப்பட்ட மெய்யும் சிலிர்க்க இனிப்
புக்கு
வாய்ப்புற்ற தெங்கு வளர்ந்த தென்
னாட்டினில்
காப்பி எதற்காக ?
ஆட்பட்டாய் சாதி சமயங்களுக்கே
அடிமையியந்தாய் ஆள்வோர்களிக்கப்
பூப்போட்ட மேல் நாட்டுச் சிப்பம்
நயந்தாய்
போதாக் குறைக்கிங்குத் தீதாய்
விளைந்திட்ட
காப்பி எதற்காக ?
திரும்பிய பக்கமெல்லாம் மேல் வளர்
ந்தும்
சிவந்து தித்திப்பைச் சுமந்து விளைந்தும்
கரும்பு விளைந்திடும் இந்த நாட்டு
மண்ணைக்
கசப்பேறச் செய்திடும் சுவையே
இலாத
காப்பி எதற்காக ?

ரா. வசந்தா.
(நான்காம் படிவம் 'ஆ' பிரிவு.)

Phone : 2233

WHITE BROS.

OPHTHALMIC OPTICIANS
3/173, BROADWAY, MADRAS.
Branch at: 7, Usman Road, Thagarayanagar.

உழவின் உயர்வு

மாண்புமிக்க இம்மாநிலத்தின் கண் மகிழ்வுடன் வாழ்தற் பொருட்டு மாந்தர் செய்யும் தொழில்கள் பலப் பல. கொத்து வேலை, தச்சு வேலை என நாம் செய்யும் தொழில்கள் எண்ணிலடங்காதன. ஆனல், இவை யெல்லாம் உயிருக்கே ஆதாரமான உணவைக் கொடுத்துதவும் உழவுத் தொழிலுக்கு முன் எம்மாத்திரம்? ஆம்!

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்
— மற்றெல்லாந்
தொழுதுண்டுபின் செல்பவர்"

என்பது வாய்மொழி யன்றோ?

நீர்வளமும், நிலவளமும் ஒருங்கே அமையப் பெற்ற நம் பாரத நாட்டின் உயிர் நாடியே உழவுத்தொழில் எனக் கூறுவோமாயின் அது மிகையாகாது. நம் நாட்டு மக்களில் பெரும்பாலோர் உழவுத் தொழிலையே செய்து உயிர் வாழ்கின்றனர். வான் பொய்ப்பினும் தான் பொய்யாக் காவிரி பாயும் நந்தமிழ் நாட்டிலுள்ள பசுமையான வயல்களைக்கண்டு பிரமிக்காதவரும் உளரோ?

உயர்வான உழவுத் தொழிலைச் செய்யும் உழவனின் வாழ்வுமே உயர்வானதாகும். கதிரவன் எழும்பு முன் எழுந்து கழனிக்குச் செல்லும் அவ்வுழவனின் சலியாத உழைப்புத் தான் என்னே? உழவின் உயர்வு உழைப்பின் உயர்வாகும் என நிரூபிப் பது போலன்றோ உளது!

களத்திலே செந்நெற் குவியலைக் கண்டு உழவனின் உள்ளத்தில் உவகைக் கடல் கரைபுரண்டோடுகிறது. அக்கடலில் அவன் பாடுபட்ட நாட் கள், அல்லும் பகலும் அவன் பட்ட துன்பங்கள், நிலத்தைப் பண்படுத்தி பயன்தருமிடமாகச் செய்ய ஏர் பூட்டி யது, எருதைப் ஓட்டியது, பரம்படித்து மடை திறந்தது, விதை தூவியது, களை எடுத்தது, காற்றிலும், மழையிலும், கடும் வெய்யிலிலும் பயிரைப் பாது காத்தது, கதிர் சாய்ந்ததும் களத்திலே குவித்தது ஆகிய நினைவுக் குமிழிகள் தோன்றி மறைகின்றன. பாடுபட் டதற்குப் பலன் கிட்டும்பொழுது உழ வன் எய்தும் உவகைக்கு உவமை யும் உண்டோ?

அளவற்ற ஆனந்தமடையும் அவ் வுழவன் தன் மகிழ்ச்சியை வெளிப் படுத்த, தனக்கு உதவி புரிந்த கட வுளைத் துதிக்க விழா கொண்டாடு கிறன். பொங்கற் புது நாளன்று அவனல் பயிர் செய்யப்பட்ட அரிசி பாலுடன் சேர்ந்து பொங்கி வழியும் பொழுது உழவன் உள்ளத்தில் உவ கை பொங்குகிறது ஆனல் அதைப் பெற பாட்டாளி சிந்தியது வியர்வை, இரத்தமும் கூடத்தான். கோழி கூவும்பொழுது எழுந்திருந்து கோட் டான் கூவும்பொழுது படுத்திருக் கிறன். கார் கண்டு களிப்பான். கடும்காற்று கண்டு கலங்குவான் இவ் வளவு துன்பங்களுக்குப் பிறகு தான் பொங்கற் புதுநாள் காணமுடிகிறது; எனின், உழவுத்தொழிலின் உயர் வைப்பற்றிக் கூறவும் வேண்டுமோ?

இத்தகைய மகிமைவாய்ந்த உழ வுத் தொழிலின் உயர்வை அறியாத

சிலர் இதை விட்டுவிட்டு எழுத்து வேலை செய்யத் தொடங்குகின்றனர். எல்லோரும் எழுத்துவேலை செய்தால், உணவு எங்கிருந்து கிடைக்கும் என சிந்தித்துப் பார்ப்பார்களாயின் உழவின் உயர்வு அவர்களுக்குத் தெரிய வரும். பலவகையில் உழவுத்தொழிலை முன்னேற்ற அரசியலார் முயன்று வருகின்றனர். இது மகிழ்ச்சிக்குறியதாகும்.

வளம் பொருந்திய பாரதநாட்டில் வந்துதித்த பாரத மக்களாகிய நாம் இந்நாட்டை பார்ப்பவர் பரவச மடையும்படி பசும் வயல்களால் நிரப்பி மண்ணைப் பொன்னாக்கி மனமகிழ்வோமாக.

ஆர். பத்மாசினி,
(ஐந்தாம் படிவம் 'அ' பிரிவு.)

அவள்

காலைப் பரிதியில் அவள் எழுவாள். உலகத்தையே கூவி அழைப்பாள் கூப்பிட்டுச் சிரிப்பாள். கல்லியாண வீட்டினில் ஆடுவாள். திருவிழாக்களில் திகழ்வாள். தெய்வத்தின் மார்மீது உறங்குவாள். வேம்பா வெறுத்து மாநிலத்தை கரும்பாக இனிக்கச் செய்யும் கருத்துடையாள். அவளைக் கண்டதும் ஆசைக் கடலில் மூழ்த்திடுவாள், சிவந்த நிறமுடையாள். வெண்மையும் கலந்த ஆடையழகாள், பூமியை பயமுறுத்திக் கண்ட இடமெல்லாம்பாயச்செய்வாள். அவள் உறவினரை, மன்னன் மகிழும், மாண்புடையாள். நம் நாட்டு அரசாங்கத்தார் கழுத்திலே ஊன்றிடும் மென்மையுடையாள். மனதை மயக்கும் மணமுடையாள் மாந்தர் நாவுக்கு இனிப்பு தந்திடும் ஒய்யாரி. மது உண்ட மன்னர் பலர் அவளைச்சுற்றி ரீங்காரம் செய்வார்கள். இறந்தவர்களின் மார்மீதும், வீரர்களின் மார்மீதும், பூத்துக் குலுங்குவாள். அவள் உடலில் கைபட்டால் கசங்கிடுவாள். மாலையில் மணம் என்னும் திரவத்தை ஊற்றிப் பரப்பிடுவாள். உத்தமர் மனதையும், நேர்மையுள்ளவர்களின் மனதையும், ஒழுக்கமற்ற பலர்களின் மனதையும், கரும்பு போன்ற உள்ளமுடையவர்களையும், இரும்பு போன்ற இதயமுடையவர்களையும், மெழுகாய் உருகச்செய்யும் தன்மையுடையாள். அப்பப்பா! இவள் யாரோ. எப்பேர்ப்பட்ட உத்தமியோ, பத்தினியோ,அமரப்பிரப்போ, அதிசயப்பிரப்போ, மானிடப் பிறப்போ, பறவை இனப்பிறப்பா மிருகத்தின் இனமா ? அல்லது தெய்வப் பெண்ணா? ஊர்வசியா? மேனகாவா? அவற்றில் யார் என்று சொல்லேன். சொன்னால் சிரிப்பாய். சிந்தித்துத் திகைப்பாய்.மெய்என்றேஉணர்வாய்.

அவள்தான் இவள். முல்லைரோஜா.

டி. சாரதா,
(மூன்றும் படிவம் 'அ' பிரிவு.)

V. PREMILA Form VI

II Prize-winner in the Manavar Manram Thirukkural Cam

தமிழன் பெருமை

ஒரு தாய் தான்பெற்ற மகவை எந்த மொழியில் தாலாட்டிப் பாலூட்டிச் சீராட்டினளோ, அம்மொழியே அக்குழவிக்குத் தாய்மொழியாம். பல்லாயிர ஆண்டுகளாக நம் இந்தியாவின் வடக்கே திருவேங்கட மலைமுதற்கொண்டு தெற்கே கன்னியாகுமரி வரையில் வாழ்ந்து வந்த மக்கள் தமிழ் என்னும் தனிப்பெரு மொழியைப் பேசியும் போற்றியும் வந்தார்கள். ஆகையால், அவ்வெல்லைக்குட்பட்ட நாமும் தமிழ் மொழியைத் தாய்மொழி என்று கூறிக்கொள்ள உரிமை உடையவராவோம். ஆகவே, தமிழராகிய நாம் நமக்குத் தாய்மொழியாய் அமைந்த தமிழ் மொழியின் சீரையும் சிறப்பையும், பேரையும், புகழையும் அறிவது நன்று.

தமிழ் என்பதற்கு 'இனிமை' என்பது பொருள். 'தமிழ் மாருதம்' என்று சேக்கிழாரும், 'தமிழ் தழீஇய சாயலவர்' என்று திருத்தக்க தேவரும், 'வண்டு தமிழ்ப்பாட்டு இசைக்கும் தாமரை' என்று கம்பரும் கூறிய தண்டமிழ்த் தொடர்களில் இவ்வினிமை என்ற பொருள் அமைந்திருப்பதையும் காணலாம் இம்மொழி எழுத்து நுட்பமும், சொற்பெருக்கமும், பொருள் பொலிவும், யாப்பமைதியும், அணியழகும், ஒலி இனிமையும், தெய்வத் தன்மையும் அமைந்தது என்பது ஆழ்ந்து அறிந்த பேரறிஞர் துணிபாகும்; மொழியாராய்ச்சியில் வல்லுனரான மேனாட்டு அறிஞர் கால்டுவெல் துரை மகனார், கிரியர்ஸன் முதலியவர் இம்மொழியின் ஒலி அமைப்பு, வரி அமைப்பு முதலிய சிறப்பு இயல்புகளை பலபடப் பாராட்டி எழுதியுள்ளமையும் இதன் பெருமையை நன்கு தெரிவிக்கும். இவ்வினிய பைந்தமிழைக் கற்றுச் சீரிய செந்தமிழ்ப் பாக்களைப்பாடிய இன்றமிழ்ப் புலவர்கள் கூறிய வசைகளை வள்ளல்களும் பொறுத்தனர் என்றால் இதன் பெருமையை என்னவென்று எடுத்தியம்புவது. 'தமிழ்' கற்றோர்க்குச் சென்றவிட மெல்லாம் சிறப்பு என்றும், 'எத்திசைச் செலினும் அத்திசைச் சோறே', 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்றும் புலவர் கூறுவாராயின், தமிழ்எத்தகைய பெருமையுடையதாய் இருக்கவேண்டும் !

இந்த மொழிக்கு இலக்கணம் அமைந்திருப்பதுபோன்று எந்த மொழிக்கும் அமைந்திலது என்று தர்க்க முறைப்படி பல பழைய மொழிகளையும் கற்றுவல்ல புலவர்கள் மொழிகின்றார்கள். ஒரு தமிழ்ப் பெரியார்,

"கண்ணுதல்பெருங் கடவுளும்
கழகமோ டமர்ந்து
பண்ணுறத்தெரிந் தாய்ந்தஇப்
பசுந்தமிழ் ஏனை
மண்ணிடைச் சில இலக்கண
வரம்பிலா மொழிபோல்
எண்ணிடைப்படக் கிடந்ததா
எண்ணவும் படுமோ"

என்று தெரிந்து பாராட்டிய பெருமை உண்மையே அன்றி உபகாரமில்லை இம்மொழி நாட்டுப்பற்றையும், ஒற்றுமை உணர்ச்சியையும் வீர எழுச்சியையும் அளிக்கும் தனிப் பெருஞ் சிறப்பு வாய்ந்தது. இது தேசப்பற்றை

உண்டுபண்ணும் என்பதற்கு நம் பாரதியார்,

'செந்தமிழ் நாடென்னும் போதினிலே
— இன்பத்
தேன்வந்து பாயுது காதினிலே ; —
எங்கள்
தந்தையர் நாடென்ற பேச்சினிலே—
ஒரு
சக்தி பிறக்குது மூச்சினிலே

என்று கூறிய வீரமொழியே சான்ருகும்.

ஒழுக்கம் என்னும் நன்னடக்கையைப் போதிக்கும் தனிப்பெரும் மாண்பு வாய்ந்தது நம் தமிழ் மொழியே. என்பது மிகையாகாது. ஜி. யு. போப்புப் பெரியார் 'தென்னிந்தியர் எந்நாட்டாரினும் நல்லொழுக்கத்திற் சிறந்து முன்னணியில் நிற்றற்குரியர். அதற்குக் காரணம் நாலடி நானூறும், திருக்குறளுமே' என்று கூறிப் போந்தனர். அவ்விரண்டு நூலும் தமிழ் மொழியில் அமைந்து, இம்மொழியைப் பெருமையுறச் செய்கின்றன. இதனுல் பாரதியாரும், 'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான் புகழ்கொண்ட தமிழ்நாடு' என்றனர். கடவுள் பக்தியை உணர்த்தும் தேவார, திருவாசக, நாலாயிரப் பிரபந்தங்களும் இம்மொழியில் அமைந்திருப்பது இதன் பெருமைக்கு ஓர் அடையாளமாம். இம்மொழிப் பாட்டுக்கள் கடவுள் பக்தியை ஊட்டி கல்லான நெஞ்சையும் கரைந்துருகச் செய்யும் என்பது உண்மை. இத்தகைய மாண்பு எம்மொழிக்கும் இல்லை என்று துணிந்து கூறலாம். இதனுல் அல்லவா சிவபெருமான் சுந்தர மூர்த்தி சுவாமிகளைச் "சொற்றமிழ் பாடுக" என்று கட்டளையிட்டருளினுர். இதனுல் தெய்வமே விரும்பும் பெருமை வாய்ந்த மொழி நம் தமிழ்மொழி என்பது தெரிகின்றது. இப்படியே இம்மொழியைப்பற்றி நீளச் சொல்லிக் கொண்டே போகலாம். ஆனுல், நம் தமிழ்மொழியை நாமே பெருமையாக சொல்லிக் கொள்வதைவிட சில அன்னிய பேரறிஞர்களின் புகழுரைகளையும் சிறிது கூறலாம்.

R. SUSHEELA Form V.
Elected as School pupil leader for the coming year (1954—55).

கனம் வின்ஸ்லோ என்னும் மாபெரும் புலவர் பெருமான், 'தமிழ் மொழி, செய்யுள் அமைப்பில் கிரேக்க மொழியினையும், இலக்கியப் பெருமையில் இலத்தீன் மொழியையும், வெல்ல வல்லது.' என்றும், கால்டுவெல் துரை மகனுர், 'தமிழ்மொழி பண்டையது ; நலஞ்சிறந்தது ; உயர் நிலையில் உள்ளது ; இதைப்போன்ற திராவிடமொழி வேறெதும் இல்லை.' என்றும், ஜி. யு. போப்பு என்னும் பெரியார், 'தமிழ் எம்மொழிக்கும் இழிந்ததன்று' என்றும்

சிலேட்டர் பெருந்தகையர் 'திராவிட மொழிகள் எல்லாவற்றிலும் மக்கள் பேசும் மொழிக்கு உரிய தன்மையைப் பெற்றுள்ள மொழி தமிழ் மொழியே தக்க அமைப்பை உடையதும் தமிழ் மொழியே.' என்றும் மாடர்க்குப் புலவர் பெருமானர். 'துரானிய மொழிகள் பலவற்றுள்ளும் மிகச் சிறிய மொழியாயும், அழகிய இலக்கியங்களைப் பொருந்தப் பெற்றதாயும் விளங்குவது தமிழே.' என்றும், காந்திப் பெரியாரும் தாம் எழுதிய சிறைச்சாலை அனுபவங்கள் என்னும் கட்டுரையில், 'தமிழர்கள் மொழியைக் கருத்தூன்றிக் கற்பதில் சென்ற மாதத்தைக் கழித்தேன். எவ்வளவுக்குக் கற்றேனே, அவ்வளவுக்கு அதன் அழகுகளை உணர்ந்தேன். அது விரும்பத்தக்கதும், இன்பமானதுமான மொழி. நான் கற்றதிலிருந்து தமிழர்கள் தங்களுக்கு இடையில் பண்டும் இன்றும், அறிவும், சாதுரியமும், ஞானமும் வாய்ந்த மக்களைக் கொண்டவர்கள் என்பதை அறிகிறேன். பின்னும் இந்தியாவில் மக்கள் தொகுதி ஒன்ருகுமானல், சென்னை இராஜதானிக்குப் புறம்பே வாழும் மக்கள் தமிழ் அறிதல் வேண்டும்,' என்றும் பலபடப் புகழ்ந்துள்ளார்.

இத்தகைய மாண்பு வாய்ந்த மொழியைத் தமிழ் மாணவர்கள் கருத்தூன்றிக் கற்கவேண்டும்; கற்றுப் பண்டைத் தமிழர் நாகரிகத்தை உணர்ந்து, அவர்கள் அடிஒற்றி நடக்க வேண்டும்.

C. மடில்டா டாரதி சாலமன்,
(ஐந்தாம் படிவம் 'ஆ' பிரிவு.)

பழந் தமிழ்ப் பெண்கள் வீரம்

பண்டைத் தமிழ் நாட்டில் பெண்ணுரிமையும், அவ்வுரிமைக் குயிரனைய கல்வியும், பிறவுமிருந்தமையான் அந்நாளைய பெண்மக்கள் வீரத் தாய்மார்களாகவும் வேறு பல அருஞ்செயல் நிகழ்த்தும் ஆற்றல் வாய்ந்தவர்களாகவும் இருந்தனர். பழந்தமிழ் நாட்டுப் பெண் மக்களின் வீரச் செயல்கள் மிகவும் போற்றற்குரியன. அவற்றுள், மூன்று தாய்மார்களின் சிறப்பைவிளக்கும் கதைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன

நரம்பு எழுந்து தோல் வற்றிய முதியோள் ஒருத்தியின் ஒரு புதல்வன் போர்க்கோலம் தாங்கி அமர்க்களஞ் சென்றனன். "அவன், போரிடை புறமுதுகிட்டான்" என்று பலர் போந்து அம்முதியோள்பால் அறைந்தனர். அது கேட்ட அன்னை தனது முதுமையைச் சிறிதுங்கருதாது வாள் தாங்கி "இவர் கூற்று மெய்யாயின், அவனுக்குப் பாலூட்டிய எனது மார்பை இவ் வாளால் அறுப்பேன்" என்று சீறிஎழுந்தனள். போர்க்களம் புகுந்து மைந்தனைத் தேடி ஆண்டு குவிந்த பிணங்களை வாளால் பெயர்த்துப் பார்த்தனள். அங்கே தன்னொரு மகன் மறுமத்திடை ஊறுதாங்கி இறந்து பட்டிருத்தலைக் கண்டு, வேதனை விளையாடும் அந்த வேளையிலே, கண்ணீர் பெருக்கெடுத்தோடக்கூடிய காலத்திலே, தன் மகன் உயிர் ஊசலாடும் அந்த வேளையிலே அத்தாய் அவனை ஈன்ற பொழுதினும் மிகவும் உவகை எய்துகிருள்! "ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச் சான்ருேன் எனக் கேட்டதாய்" என்பது வள்ளுவர் வாய் மொழி அல்லவா?

மற்றுமொரு பெண்மணியின் கொழுநன் அமர்க்களத்திலே மறப் போர் புரிந்து இன்னுயிர் துறந்தான். இவன் உயிர் துறந்த மறுநாள் மாற்றார் செருபறை கேட்டு அப்பெண்மகள் தன் தவப்புதல்வனை அழைத்து, தலை மயிர் வாரி, போருடைபுனைந்து, வேலினைக் கையில் தந்து "போர்க்களம் போய் வருக" என்று ஆசி கூறி உவகையோடு வழிகூட்டி அனுப்பினாள். இவளது வீரம் கொழுநன் பிரிவையும் மறக்கச்செய்தது! ஆஹா, இப்பெண் மகள் வீரமே வீரம்! "ஈன்று புறந்தருதல் என்றலைக் கடனே" என்னும் புறநானூற்றுச் செய்யுள் இம்மறக்குடி மகளின் பண்பை விளக்குகிறது.

கண்ணகி என்னும் கற்புக் கடவுளைப்பற்றி அறியாத தமிழர் அரியர். அப்பெருமாட்டியின் செயலை விளம்பவும் வேண்டுமோ? கண்ணகியின் ஆருயிர்த் தலைவனாகிய கோவலன் தாம்பிறந்த சோழநாடு நீத்துப் பாண்டி நாடு போந்து ஆண்டு வாணிபம் செய்ய வேண்டிக் கண்ணகியின் காற்சிலம்பை விற்கச் சென்றபோது அங்கு களவு போன பாண்டிமா தேவியின் காற் சிலம்பே, அச்சிலம்பென்று கோவலன்மீது பழி சுமத்தி மன்னன் ஆணைப்படி கொலைஞர் அவனைக் கொன்றனர். அக்கொலைச் செய்தி கேட்ட கண்ணகி, 'என்னருமை நாயகன் மீது பொல்லாத களவுப் பழி சுமத்தியா இவ்வரசு கொன்றது' என்று வீரக்கிளர்ச்சியுடன் பாண்டியன் வாயில் நுழைந்து, அவன் ஆணை பெற்று அவனருகே சென்று தன் வரலாறுகூறித் தன் நாயகனைக் கொன்றது கொடுங்கோன்மை என்று வீரத்துடன் வேந்தர் முன் நின்று வாதம் புரிந்தாள். "நாயகன் கொல்லப் பட்டான்; நமக்கென்ன இங்கு வேலை; தந்தைதாயர்க்கறிவித்து வீடு சேரலாம்" என்னும் கோழை எண்ணம் அவள் மனதில் ஊறவில்லை. 'நாயகனை அநியாயமாய்க் கொன்றது பிழை' என்று வேந்தன் முன் வாது செய்து, அவன் மனச்சான்றே அவனைக் கொல்லுமாறு செய்ததன்றோ கண்ணகியின் வீரம்! இத்தகைய வீரத்தாய்மார்கள் வாழ்ந்த புண்ணிய பூமி நம் தமிழ் நாடு. இவ்வீரத்திற்கு அடிப்படை அந்நாளில் பெண்களுக்கிருந்த உரிமையே ஆகும். உரிமை இல்லாவிடத்தில் வீர எழுச்சி ஏது?

வி. ஸோணா பாய்,
(இரண்டாம் படிவம்.)

T. V. C. & SONS LATEST PUBLICATIONS

FOR HIGH SCHOOLS

General Science	I VI Forms	Social Study I	II Forms
Mathematics	I III ,,	Citizenship (Revised) I	III Forms

FOR ELEMENTARY SCHOOLS

Kudi Arasu Tamil Vachagam	Std. I to V	New Method Geography	Std. III to V
Siruvar Bhoomi Nool	,, III to V	Nature Study & Gardening	,, III to V
Civics	,, IV to V	Pudu Malar Indian History	,, III to V
Elementary Science	,, VI to VIII	Social Study (New Syllabus)	,, VI to VIII

Other books on English and Tamil Non-detailed Study Composition and Grammar are also available.

Apply to: **T. V. CHELLAPPA SASTRY & SONS**

EDUCATIONAL PUBLISHERS,
No. 2, PHILLIPS STREET, MADRAS.

சிற்பமும் கலைவாழ்வும்

ஆண்டவன் திருவருளினாலே மக்களுக்குக் கிடைத்துள்ள பல வகையான செல்வங்களுள் சிற்பக்கலை பழமையானதும் பயனுடையதுமாகும். சிற்பம் என்பது மண்ணினாலும், கல்லினாலும், உலோகங்களினாலும், தந்தம், என்பு, முதலிய வேறு பொருள்களினாலும் சிற்பி தான் கண்ணினாற் கண்டவற்றையும், கருத்தினாற் கொண்டவற்றையும் உருவகப்படுத்திக் காண்பிப்பதாகும் அறிவின் திறத்தால் கவி காவியத்தை எழுதுவது பேரலகையின் திறத்தால் செதுக்குகிறான், சிற்பி. கவிஞனுக்கு அறிவுத்திறம் மாத்திரம் இருந்தால் போதும். கைத்திறன் இல்லாதிருப்பது அவனுக்கு எவ்விதக் குறைபாடுமில்லை. ஆனால் சித்திரக்காரனுக்கு அறிவின் திறனும், கைத்திறனும் பொருந்தியிருந்தால் தான் சிற்பம் செய்ய இயலும். கவியினுடைய கருத்தால் கண்டு களிக்கத் தக்கது காவியம். கண்ணுக்கும் கருத்துக்கும் ஒரு மிக்க இன்பத்தை அளித்து ஆனந்த முண்டுபண்ணுவது சிற்பம்.

இவ்வாறான சிற்பக்கலையானது காலப்போக்கில் மக்களது உள்ள வளர்ச்சிக்கும் பண்பாட்டிற்கும், நாகரிகத்திற்கும் தகுந்தாற்போல் வளர்வதாயிற்று. நமது பரத கண்டத்திலோ சிற்பமானது மன்னராலும் பிற செல்வராலும் உயிரெனப் போற்றப்பட்டது. அவ்வாறு போற்றியதன் பயனாக இன்றைய ஆலயங்களில் சிற்பக்கலைகள் தோன்றி மிளிர்கின்றன. கிரேக்கர்களது தொடர்புக்குப் பின்பு நம் நாட்டில் கலைகள் வளரப் பெற்றன என்று கூறப்படுகிறது. கலையை வளர்த்தலும் கலையைப் பாதுகாத்தலும் பொதுவாக தமிழ் மக்களது சீரிய கடமையாகும்.

தமிழ் நாட்டில் பழங்காலத்தில் சிறந்த வீரர்களுக்கு வீரக்கல்லும், கற்புடைய மகளிர்க்கு மகாசதிக் கல்லும் நடுவது வழக்கம். இதிலிருந்து வீரனின் உருவத்தையும், பெயர், ஊர், முதலியவற்றையும் அறிந்து அவனுடைய வரலாற்றைத் தெரிந்துகொள்ள தக்கவாய்ப்பு கிடைக்கும். கற்பு மகளிரின் நடுகல்நாம்எல்லோரும் சிறப்பாய் அறிந்த சிறந்த செய்தி அதாவது சிலப்பதிகாரத்திலிருந்து நாம் தெரிந்து கொள்ளுவது. சேரன் செங்குட்டுவன் கண்ணகியின் உருவத்தைக் கல்லால் செய்வித்துக் கோயில் எடுப்பித்தான் என்பது. இக்காலத்தில் நம் தமிழகத்தில் மிகுதியாகக் காணப்படும் திருக்கோயிலுள் எழுந்தருளியுள்ள தெய்வத்தின் திருவுருவங்கள், அடியார் திருவுருவங்கள், அரசர் முதலிய பெரியாருடைய உருவச் சிலைகள், சிறந்த பேராசிரியர்கள் முதலியவர்களுடைய சிற்பங்கள் பல இடங்களில் கலையின், கருத்தையும், சிற்பத்தின் சிறப்பையும், எடுத்துக் காட்ட ஒரு சிறந்த சான்றாக விளங்குகின்றன.

கலைகளில் தேர்ச்சிபெற்ற ஒருவனை மண்ணுலக மலரனாகக் கொள்ளல்வேண்டும். படைத்தல்தொழிலைச் செய்யும் பிரம்ம தேவன் செய்யும் வெற்றுடம்புகள் அழிவனபோல் சிற்பி படைத்த சிற்பம் எக்காலத்திலும் அழியா. உலகமுள்ளளவும் அழிவின்றி நிலைத்திருக்கும் பெருமை வாய்ந்தது. மகாபலிபுரம் போன்ற சிற்பக்கூடம், எல்லோரா, அஜந்தா, போன்ற இடங்

களில் உள்ள சிற்பங்கள் நாம் கண்கூடாகக் கண்டதொரு சான்ருகும். அமைதி நிலவிய நாட்டிலும் நாட்டின் இயற்கை நிலையை ஒட்டியும் கலை வாழ்வு வளர வழிகள் உண்டு. அத்தகைய பெருமை வாய்ந்தது நம் தமிழ் நாடு. நம் நாட்டில் சிலகாலமாக வறுமையால் வாடிய சிலர் கலைகளில் நாட்டம் செல்லாத நிலையில் இருந்தனர். அதனுல் அவை நிலை குன்றியிருந்தன. இந்த நூற்ருண்டில் கலைகள் மறுபடியும் தலை தூக்குகின்றன. அழகிய கட்டிடத்தைத் தாங்கும் அஸ்திவாரக் கற்கள் என்னும்படியான மாணவர்கள் இக் கலைவளர்ச்சிக்குப் பெருந் தொண்டுகள் செய்ய வேண்டும்.

மக்கள் உள்ளத்தையும் எண்ணங்களையும் பலவகையாக உயர்வுபடுத்தி வளர்த்து வந்த சிற்பக் கலையானது இந்நாட்களில் அத்தகைய பயன்களைத் தராமல் உறங்கிவருவது கண்டு நாம் நாணமடைய வேண்டும். கலைகளைக் கண்டு தமிழ்மக்கள் களிப்பதனை ஒரு விரதமாகக் கொண்டுள்ளார்கள் இத்தகைய கொள்கையைக் கொள்ளாமல் சிற்பங்கள் உயிருள்ளவையாய் பார்ப்போர் மனத்தைச் சுத்தப்படுத்துவதாய்க் கொள்ள வேண்டும். நாட்டின் இயல்பையொட்டியும். பண்டை நாகரித்தின் பண்பாட்டைப் பின்பற்றியும், பரந்த நோக்கத்தைப் பதிய வைத்தல் தன் முதல் கடமை எனக் கொண்டு சிற்பக்கலை நாட்டில் வளர விட வேண்டும். அப்போதுதான் உயர்ந்தபண்புஉயர்வடையும்.வாழ்வு செம்மைப்படும். செல்வமும், உணவும் மாத்திரம் ஒருநாட்டிற்கு அழகு கொடுக்காது. இனிய கலைகளே ஒரு

Cable of your choice is "NICCO" Cable.

The National Iusulated Cable Co., of India Ltd., CALCUTTA.

is a truly national concern in every sense of the word — *financed and managed entirely by Indians - and they Manufacture*

HD Bare Copper Solid & Stranded Conductors, Tinned Copper Binding Wires

Aluminium Conductors, Steel Reinforced VIR, C.T.S, L.C. W.P. cables and FLEXIBLES SCC and DCC winding wires Instrument wires, Enamelled copper wires, ETC, ETC. ETC.

All manufactured to BS & ISD Specifications.

Agent for Madras & Surrounding Districts

P. NATESAN & CO. LTD.,

10, MOUNT ROAD : : MADRAS 2.

'Phone . 86449 'Grams : PEENATESCO.

நாட்டின் அணிகலன்களாகும். நாட்டின் சரித்திரத்தையும் மக்களின் அறிவுத் திறனையும் மிகைப்படுத்திக் காண்பிப்பது சிற்பம்.

'மாடக்குச் சித்திரமும் மாநகர்க்குக் கோபுரமும் அழகு செய்வன' என்பது நன்னூல் ஆசிரியர் வாக்கு இத்திரு வாக்கை நம் திரு உள்ளத்தில் திகழ விட்டு எண்ணி ஆராய்தல்வேண்டும்.

நம் கண்ணுக்கு அணியாகவும், கருத்திற்கு உணவாகவும், மனத்திற்கு ஒரு மகிழ்ச்சியாகவும் நம் சிற்பக்கலை வளரும் வண்ணம் உலகனைத்தும் புகழத்தக்க நிலையை நம்நாடு அடைய ஊக்கம் குறையாமல் பணியாற்ற வேண்டும்.

ஆர். சரஸ்வதி.

(ஆறும் படிவம் 'ஆ' பிரிவு.)

தமிழரின் சிறப்பியல்புகள்

காவிரி, தென் பெண்ணை, பாலாறு, தமிழ் கண்டதோர் வையை பொருநை நதி என மேவிய ஆறு பல ஓடத் திரு மேனி செழித்தத் தமிழ் நாட்டினிலே, தமிழ் மொழியைத் தாய் மொழியாகக் கொண்டு வாழ்ந்த மக்கள், வாழும் மக்கள் தமிழர்கள் எனப்போற்றத் தக்கச் சிறப்பினை உடையவர்களாவார்கள்.

'தமிழனென்று சொல்லடா, தலை நிமிர்ந்து நில்லடா' என்ற பாரதி வாக்கினின்றும் தமிழரது சிறப்பு நன்கு விளங்கும். இத்தகைய தமிழரது சிறப்பியல்புகளை நாம் நன்கறிதல் அவசியம்.

பாரதியின் பாடல்கள் பலவற்றிலே பண்புறத் திகழும் தமிழர்கள் நற்செயல்கள் பலவற்றையும் நாடோறும் தவறாது சிறப்புறச் செய்திருக்கிறார்கள். தமிழ் மக்களின் நாகரிகம் தனிச்சிறப்புப்பெற்றது. மிகப் பழமையானது. தமிழ்நாட்டின் ஒப்புயர்வற்ற மன்னர்களாகிய சேர, சோழ பாண்டிய மன்னர்கள் உலகில் மிகவும் பழம் பெருமை வாய்ந்தவர்களாய் நல்லரசு செலுத்தி நாட்டை ஆண்டு வந்தார்கள்.

" மாநிலம் காவலன் ஆவான் மன் உயிர்காக்குங்காலை
தான் அதனுக்கு இடையூறு தன்னால் தன் பரிசனத்தால்
ஊனம் மிகு பகைத்திறத்தால் கள்வரால் உயிர்தம்மால்
ஆனபயம் ஐந்தும் தீர்த்து அறம் காப்பான் அல்லனோ ?"

— என்ற நம் தமிழ்ப் புலவர் சேக்கிழார் வாக்கினிற்கேற்ப மக்களைப் பாதுகாத்து வந்தனர். விலங்குகளாயினும் அவற்றிற்கும் தக்க நீதி வழங்கப்பட்டதென்பது சிலப்பதிகாரத்தில், பாண்டியன் முன் கட்டுரைத்த கண்ணகி புகழ்ந்த சோழர் திலகம் 'மனு நீதிச் சோழனால் புலனாகின்றதன்றோ! இத்தகைய பேரரசர்கள் காலத்தில் தமிழ்நாடும், தமிழரது சிறப்புகளும் சிறப்புற்றிருந்தது.

தமிழர்கள் கடல் கடந்து வாணிபம செய்வதில் கைதேர்ந்தவர்களாக இருந்தனர். முந்நீர் மடுவில் முதன் முதல் முத்துக்குளித்தவர்கள் தமிழர்களன்றோ! எனவே கரை காணாக் கருங்கடலில் முதன் முதல் கலம் செலுத்திய பெருமை தமிழர்களாகிய

நம் முன்னோர்களையே சாரும் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி யன்றோ.

'அறன் இழுக்காது அல்லவை நீக்கி
—மறன்இழுக்கா
மானம் உடையதரசு'

என்ற வள்ளுவர் வாக்கின்படி தமிழ்த் திருநாடுதன்னை ஆட்சி புரிந்த அரசர்கள் அறத்தினின்றும் மறத்தினின்றும் அகலாதிருந்தனர். இத்தகைய அரசர்களைப் பெற்றிருந்த தமிழ் மக்கள், அவர்தம் மாண்பிற்கிழுக்கு வராவண்ணம் வேந்தனைப் பின்பற்றி நடந்து வந்தனர். நல்லியல்புகள் பலவும் தமிழரது இரத்தத்திலே ஊறி, அவர்களை விட்டு நீங்காதிருந்தன.

"தமக்கென வாழா பிறர்க்குரியர்" பலரைத் தமிழகம் தன்னகத்தே பெற்றிருந்தது. என்பதனிற்குப் புலவர் பரிசில் பெற சிரமளிக்க முன் வந்த குமண வள்ளலும், தமையன் அரசாளும் பொருட்டுத் தான் துறவு பூண்ட இளங்கோவடிகளும், தான் அருந்த, வருந்திப் பெற்ற பன்னிரண்டாண்டிற்கொருமுறை பழுக்கும் அரு நெல்லிக்கனியை தமிழகம் நலம்பெற, சொல்லின் செல்வியாகிய ஒளவைக்களித்த அதியமானும் தக்க சான்றுகளாவார்கள். இத்தகைய பெரியார்கள் மற்றும் பலர் தமிழ்த் தாயின் தவப்புதல்வர்களாக அவதரித்துள்ளனர்.

தமிழகம் தன்னுள்ளே வீரப்பெரு மக்கள் பலரை உடைத்தாயுள்ளது. தன் மகன் போர்க்களத்தில் மார்பில் காயமுற்று இறந்தான் என்னும் வார்த்தைகளைக் கேட்டு மகனைப் பிரிந்த துயரை மறந்து மகிழும் வீரத் தாய்மார்கள் பாலூட்டி வளர்த்த மைந்தர்களின் வீரத்திற்குக் கேட்கவும் வேண்டுமோ?

கொடையில் சிறந்த வள்ளல்களும், தன்னுயிரைப்போல் மன்னுயிரை யெல்லாம் கருதும் வள்ளல்கள் பலரும் நம் நாட்டிடை இருந்தனர். மயிலுக்குப் போர்வை அளித்தான் பேகன். முல்லைக்கொடி படர தேர் ஈந்தான் பாரி, புரு உயிர் வாழ உடலை அளிக்க முன் வந்தான் சிபி. மற்றும் நாட்டுப்பற்றும் மொழிப் பற்றும் கொண்ட பலரும் நம் நாட்டிடை இருந்தனர். சிறப்பாக தங்கள் உடலில் உயிர் உள்ளவரையில் வெள்ளையரை நம் நாட்டில் வெற்றி காணமுடியாதவாறு செய்த கட்ட பொம்மு சகோதரர்கள் தன் பாடல்களால் பாமர மக்களை ஊக்குவித்த பாரதியார் ஆகியோர்களைக் கூறலாம்.

கற்பிற் சிறந்த கன்னிகையர் பலர் கன்னித் தமிழகத்தில் இருந்தனர். கற்புக்கரசி கண்ணகி; வன்னி மரத்தையும், மடப்பள்ளியையும் தன் கற்பிற்குச் சான்றுகளாக்கிய வனிதை; கணவன் வரும் வரை கல்லுருக் கொண்டிருந்த காதலி; பொருளீட்டச்

N. JEEJI BAI—Form VI.

I Rank in Madras Centre in Amara Bharathi Madhyama Examination

சென்ற பதி வரும்காலும் குரங்கு முகம் கொண்டிருந்த பத்தினி; காவிரி மணலின் கண் அமைந்த மணற் பாவையையே மணாளனாகக் கருதிக் காத்த மங்கை; முடவனையும் வெறுக் காது மணாளனாக எண்ணிய மாது; காவிரி கவர்ந்த கணவனைக் கடலி னின்றும் மீட்டு வந்த காரிகை, ஆதி மந்தி ஆகியோர்களே கற்புக்கரசி களுக்குத் தக்க சான்றுகளாவார்கள்

தமிழர்கள் கல்வியிலும் சிறப்புற் றிருந்தனர் என்பது சங்கப் புலவர்களா லும், சங்க நூல்களாலும், மற்றும் தற் காலப் புலவர்களாலும் புலனாகின்றது.

இவ்வாறு கல்வி, கற்பு, கொடை அறம், மறம், நாட்டுப்பற்று, மொழிப் பற்று முதலியவற்றில் சிறந்திருந்த, சிறந்திருக்கும் பலரது வரலாறுகளும் தமிழ் என்னும் பெருங்கடலில் அறிவு என்னும் நாவாயினுதவியால் தமிழ் நூல்கள் என்னும் அரிய முத்துக்களைக் கண்டெடுப்போர்க்கு நன்கு விளங்கும்.

தமிழரது சிறப்பியல்புகளை விளக்க உலகில் சிறந்த முறையில் அறம், பொருள், இன்பம் ஆகியவற் றைத் திறந்தெறிந்துரைப்பதாகிய 'திருக்குறள்' சிறந்த சான்றாகும்.

ஆ. பிரேமா,

(ஆறும் படிவம் 'அ' பிரிவு.)

தெய்வபக்தி

ஒரு நாள் வைகுண்டத்தில் மகா விஷ்ணுவானவர் பல முனிவர்கள் சூழ கொலு வீற்றிருந்தார். அப்பொழுது நாரத மகாமுனிவர் மகாவிஷ்ணுவை நோக்கி "பரமாத்மாவே! உம்மீது அதிக பக்தி கொண்டவர் யார்" என்று வினவினார். அதற்கு மகா விஷ்ணு, "நாரதரே, அதோ பூலோகத்திலிருக் கும் அந்த உழவன் தான் என்மீது மிகுந்த பக்தி கொண்டவன்" என்று சொன்னார். உடனே நாரதர் கோப மடைந்து, "பரமாத்மாவே எப்பொழு தும் உம்மையே பாடிக்கொண்டும் உம்மையே நினைத்துக் கொண்டிருக் கும் என்னை விட அந்த உழவனுக்கா உம்மீது அதிக பக்தி?" என்று ஏளன மாகக் கேட்டார். மகாவிஷ்ணு அப் பொழுது புன்சிரிப்புடன் ஒரு எண் ணெய் நிறைந்த கிண்ணத்தை நாரத ரிடம் கொடுத்து 'நாரதரே, இதை எடுத்துக் கொண்டு மூவுலகங் களையும் சுற்றிவரவேண்டும். இதி லிருந்து ஒரு துளி எண்ணெய்கூட கீழே சிந்தக்கூடாது. அப்படியே சுற்றி வரும்போது என்னை எத்தனை முறை எண்ணுகிறீர்கள் என்று என் னிடம் சொல்லவேண்டும்" என்றார். உடனே நாரதர் கிண்ணத்தை எடுத் துக் கொண்டு புறப்பட்டார். மூன்று உலகங்களைச் சுற்றி விட்டுத் திரும் பவும் வைகுண்டத்தை அடைந்தார். உடனே மகாவிஷ்ணு, "நாரதரே, என்னை எத்தனை முறை நினைத்தீர் என்று கேட்க "பரமாத்மாவே, நீங்கள் இந்த பாத்திரத்தில் வழியவழிய எண் ணெய் கொடுத்து ஒரு துளியும் சிந் தாமல் மூன்று உலகங்களையும் சுற்றி வருமாறு சொன்னீர். அப்படிச் சுற்றி வருவதே சிரமமான காரியமாக இருக்கும்போது உம்மை எப்படி

நினைக்க முடியும் ?" என்று பதிலுரைத்தார். உடனே மகாவிஷ்ணு புன்னகையுடன் 'நாரதரே, உங்களுக்கு இந்த ஒரு காரியத்தைச் செய்யும்போதே என்னை நினைக்க முடியவில்லை என்கிறீர். ஆனால் அந்த உழவனோ தினமும் தன் ஒவ்வொரு கடமையையும் தவறாமல் செய்து கொண்டிருப்பதோடல்லாமல் என்னையும் மறக்காமல் காலையிலும் மாலையிலும் ஒரு நாளாவது தவறாமல் வழிபடுகிறான். இப்பொழுது சொல்லும் என் மீது மிகுந்தபக்தியுடையவர்யாரென்று' என்றார் நாரதர் வெட்கித் தலைகுனிந்தார். அதனால் வெறும் பக்தியைவிடத் தன் கடமையையும் சரிவரச் செய்து கொண்டு தெய்வத்தையும் மறக்காமல் வழிபடுபவன் உண்மையான தெய்வபக்தியுடையவன்.

டி. ராமக்ருபா.
(மூன்றும் படிவம் 'அ' பிரிவு.)

வான் சிறப்பு

கடிகாரத்தைக் கண்டு பிடித்தாலும் நான் என் கடைமையினைச் செய்யத் தவறேன் என்று பெருமையுடன் கூறுவது போல் தலையை நிமிர்த்திக் குரலை உயர்த்திக் கூவி மற்றவர்களையும் தன்னைப்போன்று தன் கடைமையைச் செய்ய வைகறைத் துயிலெழுப்பிக் கொண்டிருந்தது சேவல். கடமையினைச் செய்வதில் நான் சேவலுக்கு இளைத்தவனல்ல என்பதனை' அறிவுறுத்தக் காகம் கரைந்தது. பரத நாட்டியத்தில் பாரத நாட்டிற்கு நிகரில்லை என்பதற்குச் சான்று நாங்களே என இளம் தென்

'Grams: FURNITURE 'Phone: 8259
ESTD: 1918

36 YEARS SERVICE

THE ROYAL CABINET MART
(BY APPOINTMENT TO H E. GOVERNOR OF MADRAS)

91, WALLAJAH ROAD, MOUNT ROAD,
MADRAS 2.

SUPPLIERS OF QUALITY OFFICE AND
HOUSEHOLD FURNITURE & UPHOLSTERY

றலினால் நாணமே உருவான நங்கையைப்போல் அசைந்தாடிய கதிர்களை உடைய நெற்பயிர்களும் பூக்களும் இலைகளும் பூத்துக்குலுங்கும்கிளைகளை உடைய மரங்களும் கண்கொள்ளாக் காட்சியாகத் திகழ்ந்தன. புள்ளினங்கள் தம் கடமையைக் கருதி கூட்டை விட்டுப் புறப்பட்டு விட்டன. உலகையெல்லாம் ஒரே குடையின்கீழ் ஆட்சி புரியும் அருணனும் ஆடைகளினால் ஞாலத்திலே நல்லொளியினைப் பரப்பித் தன் வரவை அறிவிக்க நீலவானத்தைச் செம்மை படரச்செய்து, தம்மக்கள் நலமுடன் வாழ்கின்றனரா என்று மேற்பார்வையிட தன் மெய்க்காப்பாளராக விளங்கும் மலைப்பிளவிலிருந்து வெண்புரவிகள் பூட்டிய தன்அழகிய ஆடகத்தேர் தேய்வுருவண்ணம் மென்மை பொருந்திய நீல நிற வானில் பவனி வர ஆரம்பித்தான். தாமரை மலர்ந்து தன் மகிழ்ச்சியை அறிவிக்க, புல்லானது அசைந்து கட்டியங்கூற, அதன் மேல் படிந்துள்ள பனித்துளி ஆனந்தக் கண்ணீர் சொரிந்து தன் அரும்பெரும் மன்னனை வரவேற்றது.

இவ்வரிய காட்சியைக் காண வேண்டி அப்போதுதான் நித்திரா தேவியின் மலர்க்கரங்களிலிருந்து விடுதலை பெற்ற நான் சன்னல் வழியே இயற்கை அழகைப் பருகிய வண்ணம் உட்கார்ந்திருந்தேன். பெர்னாட் ஷாவின் எந்த அறிவுரையையும் பின்பற்றாவிட்டாலும், அவரைப்போல் நானும் சன்னலைத்திறந்து வைத்துத் தான் நித்திரை செய்வேன்.

திடீரென்று நான் கண்ட இவ்வியற்கைக் காட்சி என் மனதுள் தூங்கிக்கொண்டிருந்த கற்பனைக் குதிரையைத் தட்டியெழுப்பி ஞாயிறின்

குதிரைகளைக் காட்டிலும் அதிக வேகமாக ஓடும்படிச் செய்தது.

இந்தியா இயற்கை வளம் நிறைந்த நாடு என்கின்றனர். "சோழ வளநாடு சோறுடைத்து" என்று நம் பாட்டி கூறுகிறார். இவற்றிற்குக் காரணம் என்ன? நாடு முன்னேற்றமடைய அடிப்படைக் காரணம் யாது? "அமெரிக்காவைக் கண்டு பிடித்தவர் யார்?" என்று யாராகிலும் வினவினால் படித்திருந்தால் தான் கூறமுடியும். ஆனால் இக்கேள்விகளுக்கு ஒரு சிறு குழந்தை கூட "வான் சிறப்பு தான்" என்று தன் மழலை மொழியால் கூறிவிடும்.

"அது எப்படி?" என்று கேள்வி எழும் அல்லவா? ஒரு நாடு முன்னணியில் விளங்குகிறது என்றால் காரணம் என்ன? அந்நாடு தொழிலில முன்னேற்றம் அடைந்திருக்கும்.

"சுழன்றும் ஏர்ப்பின்ன துலகம்
— அதனால்
உழந்தும் உழவே தலை"

ஆகவே தொழில் முன்னேற்றமடைய விவசாயம் விளங்குதல் வேண்டும். விவசாயம் முன்னேற மழையன்றோ மூல காரணம்? இதைக் குறித்தே "மாரி யல்லது காரியமில்லை" என்றனர் நம் முன்னோர்கள்

விதை விதைத்திருக்கும் உழவன் மழையைக் கண்டதும் கார்மேகத்தைக்கண்ட மயிலைப்போல, சூரியனைக் கண்ட தாமரையைப் போல, கண்களைப் பெற்ற குருடனைப்போல, இனிப்பைக் கண்ட இளைஞரைப் போல, வாகை சூடிய வெற்றி வீரனைப் போலக் கூத்தாடுவதை நாம் கண்கூடாகக் காண்பதில்லையா?

ஒரு நாட்டின் உயர்வு தாழ்வு அந்நாட்டு மன்னனிடம் அடங்கி இருக்கிறதென்பர். ஆனால் இயற்கைத் தாயின் கைப்பொம்மைகளாகிய நம்முள் ஒருவனாகிய அரசன், அவ்வன்னையின் அருமைக் குழந்தை மழையின் முன் எம்மாத்திரம்? மழையினால் மக்கள் நிலைமையை உயர்த்தவும் தாழ்த்தவும் முடியும். அதைக் குறித்தே,

"கெடுப்பதூஉம் கெட்டார்க்குச்
— சார்வாய் மற்றாங்கே
எடுப்பதூஉம் எல்லாம் மழை"

என்று தெய்வப் புலவர் கூறினார் அன்றோ? இதனையே நம் வாழ்வின் வழிகாட்டி ஔவையார்,

"வரப்புயர..........நீர் உயரும்
நீர் உயர நெல் உயரும்
நெல் உயரக் குடி உயரும்
குடிஉயரக் கோன்உயர்வான்'.

என்று கூறியுள்ளார். இக்கூற்று உண்மையல்லவா? ஒவ்வொரு நாடும் ஒவ்வொரு மனிதனும் உழவனைத் தழுவியே தன் வாழ்க்கை யென்னும் சக்கரத்தை ஓட்டச் செய்கின்றான் உலகிற்கெல்லாம் உயிர் நாடியாகிய உழவனின் உயிர் நாடியாவது மழையன்றோ? அவன் குதூகலத்தால் பொங்கினாலல்லவோ நகரத்திற்கு வந்து நாகரிக வாழ்க்கை நடத்தும் பானை பொங்கும்?

இவ்வாறு எனது கற்பனைக் குதிரை கட்டுக் கடங்காது ஓடிக் கொண்டிருக்கையில்தான் கடிவாளத்தை இழுத்தால் குதிரை எவ்வாறு நிற்குமோ அவ்வாறே இயற்கைத் தாய் எழுப்பிய என் கற்பனைக் குதிரை பெற்ற தாயின் குரல் கேட்டு "டக்" என்று நின்றுவிட்டது வான் சிறப்பைப் பற்றி நாள் முழுவதும் சர்ச்சை செய்தாலும் அதற்கு முடிவு ஏற்படுமா? நீங்களே விடை பகருங்கள் பார்க்கலாம்?.

எம். லட்சுமி,
(ஐந்தாம் படிவம் 'அ' பிரிவு,)

with

compliments

Sovereign

SWEETS

10 DEC 1955
MADRAS

கல்விச் செல்வத்தின் சிறப்பு

இப் பரந்த பூமியின் கண் கல்வியின் பெருமை அளவிடப்படாததாக இருக்கிறது. ஒளிக்கும் இருளுக்கும், நல்வினைக்கும் தீவினைக்கும், தூய்மைக்கும் மாசுக்கும் எவ்வளவு வேற்றுமை உண்டோ அவ்வளவு வேற்றுமை கல்விப்பொருளுக்கும் செல்வப் பொருளுக்கும் உண்டு. செல்வம் அறிவைக் கெடுக்கும். கல்வி அறிவைக் கொடுக்கும். செல்வம் அள்ள அள்ளக் குறையும். கல்வி அளிக்க அளிக்கக் குறையாது. கல்வி அழியாச் செல்வம், செல்வமோ சின்னுட்களில் அழிந்து விடும் தன்மையது. செல்வம் கள்வரால் கைப்பற்றப்படும். கல்வி அனைவராலும் போற்றப்படும். செல்வம் நம்மைத் தீயோரிடம் ஒப்புவிக்கும். கல்வி நம்மை இடரிலிருந்து தப்புவிக்கும். செல்வம் காமம் முதலியவைகளை உண்டாக்கும். கல்வி துர்ப்பழக்கங்களிலிருந்து நம்மை விடுவிக்கும். செல்வத்திடம் புகழ் அண்டாது. கல்விமான்களின் புகழ் உலக முழுவதும் பரவும்.

கல்வியே பொருள். கல்வியே பெருமை. அழகில்லார்க்குக் கல்வியே அழகு. வலிமையற்றவர்களுக்குக் கல்வியே வலிமை. அணிகலன் இல்லார்க்குக் கல்வியே அணிகலன். துன்பம் உடையார்க்கும் கல்வியே ஆறுதலளிக்கும். வறிஞர்களுக்குக் கல்வியே செல்வம். இடருற்ற வேளையில் கல்வியே பாதுகாப்பளிக்கும். கல்வி நினைத்ததை எல்லாம் கொடுக்கும் காமதேனு. வேண்டுவன அளிக்கும் சிந்தாமணி.

"கேடில் விழுச்செல்வம் கல்வி
—ஒருவர்க்கு
மாடல்லமற்றயவை."

என்ற வள்ளுவர் வாய்மொழியின் படி பகுத்தறிவு உடைய மானிடர்க்குக் கல்வியைத் தவிர வேறு செல்வம் இல்லை எனலாம். ஆற்று மணலை எண்ணிவிடலாம்! விண் மீன்களையும் எண்ணி விடலாம்! ஆயின், உலகம் தோன்றியது முதல் ஜனன மரணத் தொகையைக் கணக்கிட்டுச் சொல்லவும் கூடுமோ? இறந்தவர்கள் உடல் தன்மை எல்லாம் அவரவர் புதைந்த இடத்தோடு மறைந்து விட்டது. ஆயின் கல்வியில் சிறந்தோரது பெயரும் நூல்களும் என்றும் அழியாமல் புகழோடு இருக்கின்றன.

பண்டைய அரசர்களின் புகழ் விளங்கும்படி அவர் தம் வரலாற்றினை எழுதியவர் புலவர்களே! புலவர்களின் கவி வன்மை இல்லாவிடில் அவர்கள் இறந்த நொடியில் அவர் தம் உடலுடன் பெயரும் மறைந்திருக்கும் என்பதில் ஐயமுண்டோ! இங்கிலாந்து, பிரான்ஸ், முதலிய நாடுகளில் உள்ள நாகரிகமும், நேர்மையும், செல்வமும் அவர்களுடைய கல்வியினாலும், அவர்கள் கடைப்பிடிக்கும் மெய்மறைக் கொள்கையினாலும் வந்தவையேயன்றி மற்றவைகளாலல்லவே.

கடலைக் கிணறு விழுங்கியது போல் இந்நாட்டில் உள்ள கோடானு கோடி மக்களை எங்கிருந்தோ வந்த ஆங்கிலேயர்கள் ஆண்டது தங்கள் கல்வி பலத்தினாலன்றி உடல் வலிமை

யாலன்று. படியாதவர்கள் தங்கள் சொந்த நாட்டுப் பெருமையையே அறியாதிருக்கிறார்கள். படித்தவரோ பூமண்டலம் எல்லாம் சுற்றி வந்தவர்கள் போல் எல்லாவகையான செய்திகளையும் அறிந்து கொள்ளுகிறார்கள். படியாதவன் பண்டைத் தமிழ்ப் புலவர்களையே அறியாதவனாக இருக்கிறான். ஆயின் படித்தவனோ தற்காலப் புலவர்களை மட்டுமன்றி நேருக்கு நேர் கண்டு உறையாடுகிறவன் போல் அவர்கள் நூல்களிலுள்ள ஒழுங்கு முறைகளையும் அழகினையும் உணர்ந்து இன்பமடைகிறான். எப்படியெனின் வள்ளுவரையும், ஔவையினையும் கண்டு, "ஓ ஐயனே! ஓ, அம்மையே! உங்களுக்குத் தெரிந்த முறைமையைக் கற்பியும்" என்று கேட்பது போல் குறள், மூதுரை இவற்றைக் கற்றுத் தெளிகிறான். கம்பனுக்கு வணக்கம் செய்து, "ஓ, பாவாணர்தலைவரே, உமது வியக்கத் தக்க, காவியங்களையும், மிகுந்த கற்பனை நூல்களையும் எங்களுக்கு அறிவியும்" என்று இறைஞ்சுவதுபோல் கம்பராமாயணம் மூலம் எல்லா ஒப்புமைகளையும் கற்கிறான். அதுபோலவே வீரமாமுனிவருக்கு வணக்கஞ்செய்து "ஓ, ஆசிரியப் பெருந்தகையே! தேம்பாவணி, தென்னூல் முதலிய நூல்களைக் கற்பியும்." என்று விண்ணப்பம் செய்து கொள்வது போல் அந்நூல்களைக் கற்று இன்பமடைகிறான். இப்படியே முற்காலப் புலவர்களெல்லாம் ஆசிரியர்களாகவும், நாம் மாணாக்கர்களாகவும் இருந்து இலக்கண இலக்கிய நூல்களைக் கற்றுத்தெளிய வேண்டும்.

வாழிய செந்தமிழ்!

T. C. ஈஸ்வரி,
ஐந்தாம் படிவம் 'அ' பிரிவு.



P. T. demonstrations by pupils in the Congress Exhibition at Teynampet Grounds.

என் சுய சரிதை

நான் யார் தெரியுமா? மர்மமாகச் சொன்னுல் மானிடராகிய உங்களுக்கு எவ்விதம் புலனுகும்? சற்று விளக்கமாக உரைக்கின்றேன் கேளுங்கள். மலர் வனத்திலே மதுவுண்டு மாறி மாறி மலர்களில் வீற்றிருந்து மகரந்தம் பரப்பித்துத் தன் காரியத்தையும் சாதித்துக்கொண்டு பிறவற்றிற்கும் உதவி புரியும் பேருபகாரியின் இனத்திலே பிறந்தவள். பல விதமான நிறமுள்ள அழகிய ஆடையுடுத்தி பார்ப்பவர் மனத்தைக் கொள்ளை கொள்ளும் பண்பு நிறைந்தவள். சுதந்திரமாகச் சுற்றித் திரியும் சிங்காரிகளின் தலைமுறை. ஆனுல் இப்பொழுது பணக்கார வீட்டிலே, பகட்டுக் கண்ணுடிகள் பொருத்தப்பட்டு, பளிங்குக் கற்களால் கட்டப்பட்ட சுவற்றில் பதிக்கப்பட்ட சித்திர வேலைப்பாடுடன் கூடிய சிங்காரமான கண்ணுடி அலமாரியில், சிறிதும் கசங்காமல் வைக்கப்பட்டுள்ள பட்டாடையாக மாறு வேடத்தில் உலவி வருகிறேன். என் இனத்தவர்கள் எல்லாம் தானே வெளியில் செல்வார்கள். ஏன் நான் மட்டும் செல்லமாட்டேனு? செல்வேன் எப்படி? என் அருமை மாலா. அவள்தானே என்னை விரும்பிக் கொணர்ந்தாள். விட்டுவிடுவாளா என்னைத் தனிமையாக? அவள் வெளியே புறப்பட ஆடை எடுக்க வந்து அலமாரியைத் திறந்தவுடன் நான் கண்ணைச் சிமிட்டுவேன். அது அவளுக்கு மாத்திரம் தான் தெரியும் உடனே அவள் என்னை அணிய விரும்புவாள் அவளுடைய தாய் கூறினுலும் கேட்கமாட்டாள். தாயைவிடப் பேரன்பு கொண்டாள் போலும் என்னிடத்தில். நான் மட்டும் என்ன அவளுடைய நன்றியை மறுக்கும் பன்றியல்லவே. நாய் அல்லவோ? அவளுடைய மெல்லிய சிவந்த மிருதுவான உடலை என்னுல் இயன்றமட்டும் அலங்கரிப்பேன். பணக்கார வீட்டுப் பாவையான அவள்; செல்வந்தர் வீட்டுச் சீமாட்டி செல்வாளா நடந்து? கடுகிச் செல்லும் கார் வரும். அல்லது விரைந்து செல்லும் வில் வண்டி வரும். விருப்புடன் வெளியே செல்வோம் வேடிக்கையாக. மாலை நேரத்தில் மாலா, மலர்ந்து மணம் வீசும் மலர் வனத்தைக் காணச் செல்வாள். தனியாக அல்ல. என்னுடன். சுதந்திரத்துடன் சுற்றித் திரியும் என் இன சுந்தரிகளைக் கண்டவுடன் என் ஆடம்பரத்தை யெல்லாம் மறந்து என்னுடைய இனத்தவர் சிலரின் நிலையையும் என்னைப் போன்றவர்களின் நிலையையும் ஆராயத் தொடங்கி விடுவேன். என்னுடைய பழைய நினைவுகளில் ஆழ்ந்துவிடுவேன். சொல்கிறேன் நீங்களும் கேளுங்கள்.

எனது அன்னை முசுக்கட்டை இலைகளின்மீது என்னையும் என் அருமைச் சகோதரிகளையும் ஈன்முள். வெண்டாமரையைத் தன் வெள்ளொளியால் விரியச் செய்யும் வில்லனுடைய எரிகதிரால் நாங்கள் முட்டை வடிவத்திலிருந்து புழுக்களாக வெளிப்பட்டோம். பாரில் தோன்றிய எங்களுக்குப் பசியெடுத்து விட்டது. பசுமையான இலைகளைப் பசியாற உண்டோம். பசி தணிந்தது யாதுகாப்

புத் தேடலானோம் அமைத்துக் கொண்டோம் அழகிய கூடுகளை எங்களைச்சுற்றி உங்களது உடலில் அநேக சுரப்பிகள் இருப்பது போல எங்களது தலையிலும் சுரப்பிகள் இருக்கின்றன. அதிலிருந்து உண்டாகும் பாகு போன்ற பொருள் எங்கள் வாய்க்குக் கீழாகவுள்ள இரு துவாரங்களின் வழியாக மெல்லிய இழையாக வெளியே வருகின்றது. காற்றுபட்டவுடன் அது மஞ்சள் நிறமுள்ள நூலாக மாறிவிடுகிறது. நாங்கள் நூல் நூற்கும் பொழுது தலையை ஒரு நிமிடத்திற்குச் சுமார் அறுபத்தைந்து முறை அசைப்போம். மூன்று தினங்கள் நாங்கள் இவ்வாறு வேலை செய்தால் உங்களினத்தார் எங்களுக்குப் 'பியூப்பா' எனப் பெயர் வழங்கினர் பெருமையடைந்த நாங்கள் கூட்டுக் குள்ளேயே இருந்தோம். பசி யென்பது சிறிதுமில்லை. உணவு இல்லாமல் உலகில் வாழலாமென உள்ளத்தில் உன்னிக் கொண்டிருந்தோம். எங்கள் அவயவங்களும் வளரலாயின. நாங்கள் ஒருவரையொருவர் பிரிய வேண்டிய காலமும் நெருங்கிவிட்டது. என் சகோதரி கூட்டைவிட்டு வெளியேறி விட்டாள் இன்னொரு சகோதரி கூட்டைவிட்டு வெளியேறியவுடன் பட்டுப் பூச்சியின் இன விருத்திக்காக வளர்க்க எடுத்துச் செல்லப்பட்டாள். ஆனால் என் கதி என்ன ஆயிற்று தெரியுமா? கேளுங்கள்.

துரதிருஷ்டக்காரியாகிய நான் பியூப்பா பட்டம் பெற்று பெருமையாய் இருக்கும்பொழுது ஒரு நாள் என்னை ஒரு திரவத்தில் போட்டுவிட்டார்கள். அப்பப்பா? அந்த நிலையை நினைக்கவே முடியாது. கொப்புளங்கள் நிறைந்த கொதிக்கும் தண்ணீர். அதனுள்ளே கிடந்து தவிக்கும் நான். நான் இறந்துவிட்டேன் என்று நினைத்து அவர்கள் என்னிடமுள்ள இழையின்

'Phone : 86347

ANYTHING DISTINCTIVE IN LADIES' WEAR,

WE SERVE

SRI RAM STORES

37, PYCROFTS ROAD,
TRIPLICANE :: MADRAS

KODAMBAK, WORAIYUR, MADURA COTTON SATTON SAREES
KOLLEGAL, BANGALORE AND MYSORE CREPE

SILK SAREES A SPECIALITY

A trail will convince you

நீளத்தைப் பிரித்தார்கள். அதன் நீளம் என்ன தெரியுமா? சுமார் ஆயிரம் அடி. இழைகளை உருளையில் சுற்றி நாலைந்து இழைகளை ஒன்ருய்ச் சேர்த்து நூலாகத் திரித்தார்கள். ஆஹா? அப்பொழுது நான் எவ் விதம் இருந்தேன் தெரியுமா? மெல் லியதாகவும், வழவழப்பாகவும், பள பளப்பாகவும், உறுதியாகவும் இருந் தேன். நான் மற்ற எல்லா ஆடைக ளையும்விடச் சிறந்தவளாகக் கருதப் படுகிறேன் என்னுடைய குணத்திஞல். இன வாழ்க்கையை இழந்த இந்த துர்ப்பாக்யவதிக்கு அந்த அதிர்ஷ்ட மாவது வேண்டாமா? நான் எல்லாச் சாயங்களையும் ஏற்றுக்கொள்வேன் பிற ஒன்றை இகழ்ந்து தள்ளும் வழக் கம் என்னிடமில்லை. ஆதலால் மாலா அவளுக்குப் பிடித்தமான ஆகாயக் கலராக என்னை அமைத்துக்கொண் டாள். 'தனக்குத் துன்பம் செய்ப வர்க்கும் நலம் செய்' என்னும் மொழியைப் பின் பற்றுபவள் நான்.

ஆதலால் மாந்தர் எனக்கு ஏன்? என் இனத்துக்கே துன்பம் செயினும் நாங்கள் அவர்களைக் குளிரினின்றும் காப்பாற்றுவோம். ஆனல் எங்களு க்கு மதிப்பு அதிகம் உள்ள செல்வந்த ரிடம் தான் சுற்றிச் சுற்றி வருவோம். அந்த நன்றியறியாத அவர்கள் எங்க ளால் தங்கள் உபயோகம் தீர்ந்த பின் னர் பாத்திரக்காரனுக்குக் கொடுத் துப் பள பளப்பான பாத்திரங்கள் வாங்கிப் பாங்காக அடுக்கி வைத்துக் கொள்கிருர்கள் அல்லது வேலை செய் பவருக்கு விருப்பமின்றிக் கொடுக்கி ருர்கள்.

நான் மாலாவின் அன்பை வெகு நாட்கள் எதிர்பார்க்கிறேன். ஆனல் மாலாவின் அருள் என்னிடம் எத்தனை நாளைக்கு? என் அழகு குலையும் வரை யில். பரவாயில்லை. இதனைப் படிக்கும் நீங்களாவது மறவாமல் இருங்கள்.

சி. வி. பார்வதி.
(ஆருவது படிவம் 'ஆ' பிரிவு.)

"Hospital Visiting".
மாணவியரது ஒரு நாளைய சேவை

மனத்தை மயக்கும் மாலை நேரம். சில்லெனத் தென்றல் வீசியது. புள்ளி னங்கள் இங்கொன்றும், அங்கொன் றுமாகக் 'கீச்சிட்டன'. மனேகரமான மாலை நேரத்தில். மகிழ்ச்சி ததும்ப மாணவியராகிய நாங்கள் ஒன்று சேர்ந்து எமது ஆசிரியையுடன் கஸ் தூரிபாய்–காந்தி மருத்துவச் சாலை யைச் சென்றடைந்தபோது சுவர்க் கடிகாரம் மணி $4\frac{1}{2}$ எனக் காட்டியது.

உழைச் செல்லும் பெண்மணி யிடம் உத்தரவு பெற்று உள்ளே நுழைந்தோம். அங்கு அனைவரையும் அழைத்துச் சென்று அச் சிறுவர்களை அறிமுகப் படுத்திஞர் Sister Agnes. பிறகு பாலருக்கு மிட்டாய்கள் பங் கிடப்பட்டன வேடிக்கையாக அம் மிட்டாய்களின் வித விதமான வர்ணங் களைப் பற்றி வினவினேம். அது அச் சிறுவர், சிறுமியருக்கு வேதனை கொடுக் கும் நோயையும் மறக்கச் செய்தது; விளையாட்டாகவும் கருதச் செய்தது. களிப்பூட்டும் வண்ணமும், கருத் துக்கு இசைந்ததுமான கதைகளைக்

கூறினேம். பாடப் புத்தகங்களைப் பார்க்கச் செய்தோம். பரவசமடைந் தனர் பால்மணம் மாருப் பாலர்கள். களைக் கண்டு அழும் குழந்தைகளும் ஆனந்தமடைந்தன. களிப்புடன் காணப்பட்டனர் கடும் நோயையும் மறந்த நிலையில். அங்கிருந்த தம்தம் குழந்தைகளைப் பார்வையிட வந்திருந்த பெரியோரும், எங்கள் வரவால் தங் கள் குழந்தைகள் மிக்க மகிழ்வெய் தின என மொழிந்தனர். அன்புடன் அளித்த ஆடைகளை ஆர்வமுடன் அணிந்தனர் குழந்தைகள். பெற்றுக் கொண்ட பொருள்களைப் பார்த்துப் பெருமை பூண்ட பாலர்களது கருத் திற்கேற்ப கணித முறைகளைக் கற் பித்தோம்.

பின்பு மேல் மாடிக்குச் சென் ரேம். அங்கு எலும்பு முறிவினுல் அசையக்கூட முடியாத நிலையிலிருந்த குழந்தைகளும் மிக்க மகிழ்ச்சி யடைந் தனர். உறங்கும் குழந்தைகளும் உற் சாகத்துடனெழுந்து உட்கார்ந்தனர். ஆண்டவன் அடிமலரிணையைத் தொழ, அடையப்பெறும் அனேக நன் மைகளை எடுத்துரைத்தோம். அவர் கள் தாங்களும் இறைவனை வணங்கி வருவதாகவும், அதன் முறைகளையும் கூறினூர்கள்.

அங்கிருந்த அச்சிறு காலத்தில் நாங்கள் அனைவரும் ஆனந்தமடைந் தோம். அத்துணை சிறிதளவு நேரத்தில் சிந்தைக்குச் சீரிய விருந்தானதுதான் என்ன? எங்கள் கருத்துக்குக் களிப் பூட்டியது தான் என்ன? காட்சியா? கதையா? அல்லது இன்னிசையா? அல்ல. சேவை — பிறருக்குச் சேவை.

மாணவியராகிய எங்களுக்குத் தற்போதே தொண்டு புரியும் தகை மையை அளித்து, இத்தகைய புகழ ளிக்கும், இனிப்பூட்டும் சேவை செய்

For

PURE DIAMONDS

Visit

KANAIYALAL ISHUARLAL & Co.

DIAMOND MERCHANTS & JEWELLERY,
235, Govindappa Naick Street,
MADRAS 1.

TELEPHONE NO: 3012

யச் சந்தர்ப்பமளித்த பள்ளிக்கும், அந்த வாய்ப்பை ஏற்படுத்திய ஆண்டவனுக்கும் எமது நன்றி !

மணி 6 அடித்தது மகிழ்ச்சிக் கடலில் மூழ்கியிருந்த எங்களுக்கு அது, திரும்பிச் செல்லும் நேரம் நெருங்கியதை அறிவிப்பது போன்று இருந்தது. வாயில்வரை வழியனுப்பிய பாலர்களிடம் விடைபெற்றுத் திரும்பினேம். இக்களிப்புக்கே ஏற்றதுபோல் திரும்பும்போது சிறு மழை தூறியது. இவ்வாறு எண்ணற்ற இன்பமுடன் எங்கள் மருத்துவச்சாலை சேவை இனிது முடிவுற்றது. அன்று களிப்புடன், கடற்கரைச் சாலை வழியே மருத்துவச்சாலை சென்று வந்த காட்சி எங்கள் மனக்கண்களை விட்டு அகலவே இல்லை. அகலவும் முடியாது.

வி. பிரமிளா,
(ஆறும் படிவம் 'ஆ' பிரிவு·

சர். ச. வேங்கடராமன்

சர். ஸி. வி. ராமன் 1888–ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 7–ஆம் தேதி சந்திரசேகரய்யருக்கும்; பார்வதிக்கும் அருந்தவப் புதல்வராய்த் தோன்றினர் தஞ்சை ஜில்லா பாபநாசத்திற்கு அருகிலுள்ள மாங்குடி என்ற ஊரினர். சந்திரசேகரய்யர் திரிசிராப்பள்ளியில் உள்ளதொரு உயர்தரக் கல்லூரியில் பேராசிரியராக இருந்து வந்தார் ; பிறகு நண்பரொருவர் விருப்பத்திற்கிணங்க விசாகப்பட்டினம் இந்துக் கல்லூரியில் பொருளியல் நூற் பேராசிரியராக வேலை செய்துவந்தார். அவருக்குப் போதிய வருவாய் இருந்ததெனினும் பணக்காரர் எனச் சொல்ல முடியாது. விஞ்ஞானக் கலையில் ஆர்வம் கொண்டவர் ; மிக்க தீரர்.

பெற்றோர் குணச்சிறப்புகளைக் குழந்தைகள் பெற்றிருக்கும் என பொதுவாகச் சொல்வதுண்டு. அதுபோல தந்தைக்கு விஞ்ஞானக் கலையிலும் இசைக்கலையிலும் எப்படிப்பட்ட ஆர்வம் இருந்ததுவோ அதைப் போலவே இராமனுக்கும் ஆர்வம் இருந்தது. இவர் இளமைப் பருவத்தில் பால சூரியன் எழிலையும், இயற்கையில் தோன்றும் மாறுதல்களையும் உணர்ந்து மகிழும் ஆற்றல் பெற்றிருந்தாரென்பது இவர் தம் பிற்கால ஆராய்ச்சிகளால் நன்கு விளங்கும்.

மாணவர் பலரைப்போலவே இராமனும் உயர்தரக் கலாசாலைக்குக் கல்வி பயிலச் சேர்க்கப்பட்டார். உபாத்தியாயர் அனைவரும் இளைஞரை அன்புடன் விரும்பினர். அவ்விளைஞரிடம் விஞ்ஞானக் கலையில் அதிக விருப்பம் இருப்பது கண்டு அரும் பெருஞ் செயல்கள் வெளியிட்ப்போவதைச் சிறுவயதிலேயே எல்லோரும் எதிர்பார்த்தனர். ஆனல் விஞ்ஞானக்கல்வியில் அவருக்கிருந்த ஆர்வம் குறைந்து, அன்னிபெஸண்ட் அம்மையாரின் பிரசங்கங்களினல் இந்து தர்ம சாஸ்திரத்தில் பற்றுதல் உண்டாயிற்று. இராமாயணம், மகாபாரதம் என்னும் இதிகாசங்களைக் கற்பதிலேயே கண்ணுங் கருத்துமாயிருந்தார் .சில ஆண்டுகள் கழித்து இவர் இராமாயணத்தைப் பற்றியும், மகாபாரதத்தைப் பற்றியும் எழுதிய கட்டுரையொன்று எல்லோராலும் பாராட்டப்பட்டது.



Pupils of Form VI and the staff of the High School

இவர் 1901-ல் சென்னை ராஜ தானிக் கல்லூரியில் பி ஏ. மாணவ ராகச் சேர்ந்தார். ஆசிரியர் அனைவ ரும் இராமனை அன்புடன் நேசித்த னர். இராமனுக்கு மறுபடியும் விஞ்ஞா னக் கலையில் பற்றுதல் தோன்றியது. ஓயாது பல புத்தகங்களைப் படித்தார். கலலூரியில் விஞ்ஞானக் கலையைப் படிப்பதென்று உறுதி கொண்டார். இவர் பி. ஏ. யில் எல்பின்ஸ்டன் பொற் பதக்கமும். ஆரணி ஜாகிர்தார் பொற் பதக்கமும் பெற்றார். எம் ஏ. வகுப் பில் சேர்ந்து அதிலும் முதல்வராகத் தேறினர். இராமன் விஞ்ஞானக் கலை ஞராய்த் திகழ விரும்பினர். விஞ்ஞா னக் கலை வளர்ச்சிக்காகவே தம் வாழ்க்கையை உரிமைப்படுத்த விழைந்தார். இராமன் இவ்வாறு விஞ் ஞானக் கலைவளர்ச்சிக்காகப் பாடுபட் டுக் கொண்டிருந்தபோது கல்கத்தா விலே விஞ்ஞானப் பல்கலைக் கழக அறிவியற் கல்லூரி **(University college of Science)** ஒன்றை ஏற் படுத்த சர். அஷுடோஷ் முகர்ஜி அரும்பாடுபட்டார். வேண்டிய பணம் இருந்தபோதிலும் தகுந்த பௌதிக நூற் பேராசிரியர் **(Physics Professor)** அகப்படாததைக்குறித்து அனை வரும் வருந்தினர். அச்சமயத்தில் சர். அஷுடோஷ் முகர்ஜி **(Sir Asutosh Mukerjee)** இராமனை ஆசிரியர் தொழிலை ஒப்புக்கொள்ளும்படி வேண்டினர். இராமன் அளவற்ற மகிழ்ச்சி அடைந்து தாம் வகித்த உயர்ந்த பதவியை ராஜிநாமா செய்து விட்டுப் பொருள் நூற் பேராசிரியர் வேலையை ஒப்புக்கொண்டார்.

சிலகாலம் சென்று அவர் மேனாடு செல்லுகையில் ஒரு நாள். வானமும் கடலும் நீலநிறம் பெற்றிருப்பதின் காரணம் என்னவென்பதை ஆராய லானார். அதுகாறும் எவரும் அதைப் பற்றி ஆராய்ந்து உண்மையை வெளி விட வில்லை. ஆதலால். அவ்வுண்மை யைக்கண்டு வெளியிடுவதே தம் முதற் கடமை எனக்கருதினர். பல நாள் ஆய்வுக்களத்தில் உழைத்தார்; வெற்றி கண்டார். அதாவது சூரியன் ஒளிக்கதிர் காற்றின் வழியே நிலம் நோக்கி வருகையில் பல நிறங்களோடு உள்ளன. அக்கதிருள் வெண்ணிறக் கதிர்கள் அடங்கிய பல்வகை வண் ணக்கதிர்களும் வாயுவணுக்களால் தனித்தனியே பிரிக்கப்படுகின்றன. அவ்வண்ணக்கதிர்களில் பிற கதிர் களைவிட மிகுதியாகப் பிரிக்கப்படும் நீலநிறக்கதிர்களே வானத்திற்கு நீல நிறத்தை அளிக்கின்றன எனவும் அவ் விதமே கதிரவன் ஒளி நீருட் புகுந்து செல்லுங்கால். அக்கடல் நீரில் நீல நிறத்தைக் கொடுக்கின்றன எனவும் கண்டார். இவர் கண்டதின் பலனாக கல்கத்தா விஞ்ஞானக் கல்லூரி உல கிலேயே பெருமை பெற்று விளங்கு கிறது.

இவரது ஆராய்ச்சிகளில் மிகச் சிறந்ததும் நோபெல் பரிசு பெறுதற் குக் காரணமாயிருந்ததும் ஒளிச்சிதற லின் ஆராய்ச்சியேயாகும். 1929-ம் ஆண்டு ஜனவரி மாதம் சென்னை மாநாகரில் " இந்திய விஞ்ஞான சாஸ் திர ஆலோசனைச் சங்கம் " கூடிற்று. ஆராய்ச்சியில் தலைசிறந்து விளங்கும் இராமன், அச்சங்கத்தின்பொது காரிய தரிசியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவ்வாண்டு இவருக்கு 'ஸர்' பட்டம் அளிக்கப்பட்டது. உரோம் நகரிலிருக் கும் இத்தாலியப்பல்கலைக்கழகம் இவ ருக்குப் பொற்பதக்கம் ஒன்று அளித் தது. 1930-ஆம் ஆண்டு லண்டன்

அரசர் கழகம் இவருக்கு 'ஹ்யூஸ்' பதக்கத்தை அளித்தது. அவ்வாண்டிலேயே ஸ்வீடன் நகரில் ஆல்பிரெட் நோபெல் என்பவரால்அளிக்கப்பட்டு வரும் நோபெல் பரிசு இவருக்குஉலகிலேயே சிறந்த அறிவியற் பேரறிஞர் என்பதற்காகவும், எவரும் கண்டுபிடிக்காத ஓர் உண்மையை இவர் முதன் முதலிற்கண்டு பிடித்ததற்காகவும் வழங்கப்பட்டது. உலகத்தில் மக்களாய்ப் பிறந்து, கல்வியறிவு பெற்று பலராலும் புகழப்படும் பெருமை வாய்ந்தவரை விண்ணவரென்பர் பண்டையோர்; "தேவரே கறறவர்" என்னும் தொடரால், அது இனிது விளங்குகிறது. இராமன் அறிவியல் உலகிற்கு ஒப்பாரும்மிக்காரும் இன்றி இந்திய நாட்டை உல்கிற்கு அறிமுகப் படுத்தி நாட்டுத் தொண்டை நன்கு ஆற்றி வருகின்றார். இந்திய நாட்டின் வரலாற்றை எழுதுங்கால் இடம்பெறக் கூடிய பேரறிஞருள் சர். சி. வி. ராமனும் ஒருவராவார். எந்நாட்டவரும் போற்றும் எண்ணில் புகழ்பெற்று வாழும் இராமன் அடிச்சுவடுகளை வருங்காலத்தவர் பின்பற்றி நடப்பாரேயானால் நம் இந்திய நாடு எந்நாட்டினும் தலைசிறந்து விளங்கும்.

பி. சரோஜா,

(ஐந்தாம் படிவம் 'ஆ' பிரிவு.)

IT PAYS TO PLAY

KEEP HEALTH

KEEP YOUTH &

FEEL FIT

IT PAYS TO PLAY
Uberoi
LIMITED
SPORTS SPECIALISTS



22, MOUNT ROAD,
MADRAS

Telephone: 86792.

INDIA'S FOREMOST SPORTS GOODS MAKERS

மார்க்கோ போலோவின் வாழ்க்கை வரலாறு

மார்க்கோபோலோவின் தந்தை நிகலோபோலோ என்பது. அவர் சிறிய தந்தை பெயர் மெர்பியூ என்பது. இவர் வெனிஸ் நகரத்தில் 1254-ஆம் வருடம் பிறந்தார். இவர் பிரபுக்கள் குடும்பத்தைச் சேர்ந்தவர். மார்க்கோபோலோ பிறப்பதற்கு முன் அவர் தந்தையும், சிறிய தந்தையும் சீனுவிற்கு வியாபார விஷயமாகச் சென்றனர். மார்க்கோபோலோ பிறந்தவுடன் அவர் தாயார் இறந்து விட்டார்.

நிகலோபோலோவும், மெர்பியூவும் சீனுவிற்குச் சென்றகாலத்தில் அந்நாட்டை குப்லாகான் என்ற அரசர் ஆண்டு வந்தார். கீழ் நாடுகளுக்கு முதன் முதலில் வந்த ஐரோப்பியர்கள் நிகலோபோலோவும் மெர்பியூவும் தான். இவர்கள் சீனுவிற்கு வந்தவுடன் குப்லாகான் இவர்களுக்குத் தக்கமரியாதைகள் செய்து தன்னுடைய அரண்மனைக்குக் கூட்டிக்கொண்டு சென்ருன். குப்லாகான் அவர்களிடம் ஐரோப்பிய மக்களின் நடவடிக்கைகள், போர் நடத்தும் முறை, கடவுளை வணங்கும் முறை முதலியவற்றைப் பற்றி விசாரித்தார்.

சில வருடங்களுக்குப பிறகு கான் ஒருகடிதத்தை நிகலோபோலோ மூலம் போப் ஆண்டவருக்குக் கொடுத்து அனுப்பினுர். நிகலோவும், மெர்பியூவும் 15-வருடங்கள்கழித்து, 1270-ஆம் வருடம் வெனிஸிறகுத் திரும்பி வந்தார்கள். அவர்கள் சீனர்களைப்போல உடை அணிந்திருந்தனர். அவர்கள் மார்க்கோபோலோவின் தாயாரைப் பற்றிக் கேட்டது மார்க்கோபோலோவிற்கு ஆச்சரியமாக இருந்தது. பிறகு தான் அவர்கள் தன்தந்தையும், சிறிய தந்தையும் என்று அவருக்குத் தெரிந்தது தான் பிறக்குமுன்பே அவர்கள் சீனுவிற்குச் சென்று விட்டதால் தன் தாயார் இறந்தது அவர்களுக்குத் தெரியாது என்றும் அவர் அறிந்தார்.

நிகலோபோலோவும், மெர்பியூவும் மார்க்கோபோலோவும் 1271-ஆம் வருடம் வெனிஸிலிருந்து புறப்பட்டார்கள் அவர்கள் முதலில் சிஸிலிக்குச் சென்று அந்நாட்டு அரசரிடம் தாங்கள் வந்த காரியத்தைப்பற்றிக் கூறினுர்கள். இது மிகவும் முக்கியமான காரியமென்று விரைவில் செல்லக்கூடிய கப்பல் ஒன்றை, அரசன், அவர்களிடம் கொடுத்து அதில் அவர்களைப் போகச் சொன்னுர்.

அவர்கள் மூவரும் போப் ஆண்டவரிடம் சென்று கான கொடுத்தனுப்பிய கடிதத்தைக் கொடுத்து விட்டுப் பதில் வாங்கிக்கொண்டு, 40 நாட்கள் பிரயாணம் செய்து சீனுவிற்கு வந்தார்கள் அவர்கள் வருவதை அறிந்த உடனே குப்லாகான் பரிவாரங்களையெல்லாம் அனுப்பி மூவரையும் வரவேற்ருர். மூவரும் தரை வரை குனிந்து அரசரை வணங்கி போப் ஆண்டவர் கொடுத்த பரிசுகளையும், போப் ஆண்டவர் கொடுத்தனுப்பிய பதில் கடிதத்தையும் கொடுத்தனர். மார்க்கோபோலோவின் முகவெட்டையும், நுண்ணறிவையும் கண்டு மகிழ்ந்து கான் அவரைப் பலதேசங்களுக்கும் தூதுவராக அனுப்பினுர். போலோ தாம் சென்ற ஒவ்-

வொருநாட்டின் மக்கள் வாழ்க்கை, வியாபாரம், இயற்கையமைப்பு, நகர அமைப்பு முதலியவற்றைத் திருத்தமாக அறிந்தார். யுத்த காலத்தில் போலோ கானிடம் ஐரோப்பியப் போர் முறையைப் பின்பற்றச் சொன்னார். இதன்படியே கான் அம்முறையைப் பின்பற்றி அதில் வெற்றி பெற்றார். ஆதலால் போலோ குடும்பத்தினர் கானிடமிருந்து பல பரிசுகளையும், கானின் நன்மதிப்பையும் பெற்றனர்.

போலோ குடும்பத்தினர் கானிடம் தங்கள் நாட்டிற்குச் செல்ல அனுமதி கேட்டனர். ஆனால் கான் அவர்களை வெனிஸிற்குச் செல்ல வேண்டாம் என்று கூறினார். பாரசீக அரசரிடமிருந்து ஒரு நாள் மூன்று ராஜாங்க உத்தியோகஸ்தர்கள் சீனாவிற்கு வந்தார்கள். அவர்கள் பாரசீக மன்னர் மணந்து கொண்டிருந்த குப்லாகானின் குடும்பத்தைச் சேர்ந்த, பெண்மணி இறந்து விட்டதாயும் கானின் உறவினருள்ஒரு ராஜகுமாரியைஅனுப்புமாறு பாரசீக மன்னர் கூறியதாகவும் கானிடம் கூறினர். கான் ஒரு ராஜகுமாரியை அவர்களுடன் அனுப்பினார். அவர்கள் நடந்து செல்ல வேண்டி இருந்தது. போலோ, கானிடம் தானும் அவர்களுடன் கப்பலில் சென்று அவர்களைப் பாரசீகத்தில் விட்டு விட்டுத் திரும்பி வருவதாகக் கூறினார். அவர்களுடன் பாரசீகத்திற்குப் போலோ குடும்பத்தினர் சென்றனர். போகும் வழியில் அவர்கள் கான் இறந்துவிட்ட செய்தி கேட்டு, போலோ குடும்பத்தினர் பாரசீகத்திலிருந்து சீனாவிற்குத் திரும்பிப் போகாமல் நேராக 1295-இல் வெனிஸிற்குச் சென்றனர். அங்கு அவர்கள் தங்கள் உறவினர்களுக்குத் தாங்கள் கீழ்நாட்

For— **THE TEACHING OF SCIENCE**

SCHOOLS — COLLEGES

The Andhra Scientific Co., Ltd., are proud to have served the Educational needs of the Province for over 25 years. Their long and varied experience in planning and equipping up-to-date laboratories for physics, Chemistry, Biology, etc., have placed them in an unique position in the Indian Scientific Industry.

They have earned reputation as manufacturers and stockists of a wide range of Scientific Apparatus, Instruments for Schools and Colleges.

Enquiries are solicited for catalogue containing detailed specifications of Demonstration Apparatus for teaching General Science in Forms I.—VI. Apparatus and Equipment for students' practical work and experiments, and equipment of special interest for Advanced Scienlfic Course.

Please write to :—

THE ANDHRA SCIENTIFIC COMPANY LIMITED

4. BLACKER'S ROAD, MOUNT ROAD :: MADRAS 2.

Head Office & Works : MASULIPATAM Branches : BOMBAY—VIZAGAPATAM

டிலிருந்து கொண்டுவந்த விலையுயர்ந்த பொருள்களைக் காட்டி, கீழ்நாட்டின் செல்வச் சிறப்பைப்பற்றிக் கூறினர்.

ஜெனேவாவிற்கும், வெனிஸிற்கும் நடந்த யுத்தத்தில் மார்க்கோ போலோ கைதியாகிச் சிறையிலடைக்கப்பட்டார். அப்பொழுது போலோ கீழ்தேசத்து மக்களின் வாழ்க்கையைப்பற்றியும், சீனு அரசராகிய குப்லாகானைப்பற்றியும், கீழ்தேசத்துச் செல்வச் சிறப்பைப்பற்றியும் கூறியவற்றை ருஸ்தி செல்லோ என்பவரைக் கொண்டு ஜெனேவா நாட்டு மக்கள் எழுதுவித்தனர். அந்தப் புத்தகம்தான் ஆங்கிலேயர்களைக் கீழ்நாட்டிற்குச் செல்லத் தூண்டியது.

ம. பிரெமிளா,
(நான்காம் படிவம் 'இ' பிரிவு.)

ஆபத்துக்கு உதவிய நண்பன்

மாலை நேரம். சூரியன் அடிவானத்தில் மறைந்து கொண்டிருந்தான். பறவைகள் யாவும் தம் கூட்டிற்குச் சென்று கொண்டிருந்தன. அப்போது தான் சேகர் கல்லூரியை விட்டு வந்து கொண்டிருந்தான். சேகரின் முகம் வாடியிருந்தது. அவன் நடையில் சோர்வு காணப்பட்டது. அது மட்டுமா? அவன் உள்ளமும் அல்லவா சோர்ந்து இருந்தது. பாவம், அவன் என்ன செய்வான். சேகர் ஏழை என்ற காரணமே அவனை அந்நிலையில் இருக்கச் செய்தது. சேகருக்கு, அவன் அம்மா சிவகாமியைத் தவிர வேறு உற்ருர், உறவினர் என்ற சுற்றத்தார் எவரும் இல்லை. சிவகாமியோ இட்லி சுட்டு விற்று அதன் மூலம் வரும் சிறு வருமானத்தைக் கொண்டு சேகரை மைலாப்பூரில் உளள விவேகானந்தர் கல்லூரியில் பி. ஏ வரைக்கும் படிக்கச் செய்தாள். அவன் எதிர்காலச் சுக வாழ்வே தன் வாழ்வு என எண்ணி மகிழ்ந்தாள்.

சேகர் அறிவிற் சிறந்து வகுப்பில் முதல்வனுக விளங்கினுன். பரிசுகளும், நற்சாட்சிப் பத்திரங்களும் பல பெற்ருன். ஒரு சமயம் அவனுடைய தாயாருக்கு விஷசுரம் கண்டது. கையிலோ காசு இல்லை. சுரம் வரவர அதிகரித்தது. சேகர் கல்லூரியில் இதே சமயம் பரீட்சையும் நெருங்கிற்று. சேகர், இதுவரை பரீட்சைப் பணமான ரூ. 40ஐக் கட்டவில்லை. பணம் கட்டினுல்தான் பரீட்சை எழுத முடியும். இல்லையேல் இவ்வளவு காலம் கஷ்டப்பட்டுப் படித்தது வேலிக்கு இறைத்த நீராய் அன்றே முடியும்! தாயாரைப் பரிசோதித்த டாக்டர்களெல்லாம் உயர்ந்த மருந்து வாங்கிக் கொடுத்தாலன்றி அன்னை பிழைப்பது கடினம் அதற்குக் குறைந்தது ரூ 20 தேவை என்று கூறிவிட்டனர். இதுவரையில் எவ்வளவோ பணத்தைக் கொட்டிப் படித்த சேகருக்கு இன்று அற்ப 40 ரூபாயில் அவனது பி. ஏ. பட்டமும், 20 ரூபாயில் அவனது அம்மாவின் உயிரும் ஊசலாடிக் கொண்டிருந்தன. ஆக மொத்தம் 60 ரூபாய்க்கு அவன் பட்டபாடுகள் அப்பப்பா! சொல்லவும் தரமாமோ? அவனது மனக்கோட்டைகள் யாவும் மணற்கோட்டைகளாயின. அவனது பாறையினும் கெட்டியான மனத்தி

லுள்ள எண்ணமெல்லாம் சம்மட்டி கொண்டு தகர்த்தெறியப்பட்டன. அநியாய வட்டிக்குப் பணம் கொடுத்து அதிலேயே பத்து வீடுகள் கட்டிய பரந்தாமனைச் சேகர் நாடியபோது அவனும் உதவி செய்ய மறுத்து விட்டான். பட்டையாக நாமத்தைச் சார்த்திக் கொண்டு தொப்பை வயிற்றைத் தடவிக் கொண்டு செல்லும் பல இலட்சத்துக்கு அதிபரான பலராம முதலியாரை நாடியபோது அவர் பல்லை இளித்தவாறே பணம் இல்லை என்று கை விரித்தார். கையிலே காசு இன்றிக் கடன் கொடுப்பார் யாரும் இன்றி வருந்தி நிற்கும் சேகரைக் கண்டான் நண்பன் சதாசிவம். சேகரின் அவல நிலையை உள்ளவாறு உண்மையாக உணர்ந்த சதாசிவம், தன் குடும்பச் செலவுக்காக வைத்திருந்த பணத்தில் 60 ரூபாய் கொடுத்து உதவினர்.

R. VIJAYA—Form I.

Bharatha Natyam at the Arts and Crafts Exhibition held at the Museum Theatre.

பணத்தைப் பெற்ற சேகர் பரீட்சைப் பணத்தைக் கட்டி விட்டுத் தாயாருக்குக் குளுகோஸ் இன்ஜக்ஷனையும் வாங்கிக் கொடுத்தான். சேகருக்கு விடிவு காலம் போலும். தாயாரும் உயிர் பிழைத்து எழுந்தாள். சேகர் பரீட்சையிலும் முதல் வகுப்பில் தேறி, பி. ஏ. பட்டமும் பெற்று உயர்ந்த உத்தியோகத்தில் அமர்ந்தான். ஆபத்துக் காலத்தில் தக்க சமயத்தில் செய்த சிறு உதவியை மறக்க மாட்டாத சேகர், தற்செயலாகக் கண்களிழந்த சதாசிவத்தைக் கண்டான். சதாசிவம் சாகும் வரையில், அவரைக் காப்பாற்றும் பொறுப்பை ஏற்றுக் கொண்டு புன் முறுவல் பூத்த அவனது பெருந் தன்மையை என்னென்றுரைப்பது ? என்னே ! அவனது பெருந்தன்மை. சதாசிவம் தக்க சமயத்தில் 60 ரூபாய் கொடுக்காமல் இருந்திருந்தால் சேகரின் தாய் சிவகாமி தான் உயிர் பிழைத்திருக்க முடியுமா ? இல்லை, சேகர் தான் பட்டதாரியாகி வேலை பார்க்கக் கூடுமா ? ஆகவே செய்யும் உதவி சிறிது என்றுலும் அது சமயத்தில் சிறந்த பலன்களைத் தந்திருக்கின்றன. ஆதலின், சிறிய உதவியை ஆன்றோர் உலகினும் பெரிதாகக் கருதிப் பாராட்டுவர் என்பதை இக்கதையின் மூலம் அறியலாம்.

R. ஜமுனு,
(நான்காம் படிவம் 'ஆ' பிரிவு.)

நான் பார்த்த மெடிக்கல் கண்காட்சி

சென்ற ஆண்டு, அதாவது 1953-ஆம் வருஷம் மெடிக்கல் கல்லூரியின் சார்பாக ஒரு மெடிக்கல் கண்காட்சி நடைபெற்றது அதில் விஞ்ஞான சம்பந்தமான காரியங்கள் விரிவாகக் காண்பிக்கப்பட்டிருந்தன. அங்குள்ள உடல் சம்பந்தமான பொருட்கள் இருந்த இடங்களை 12 பகுதிகளாகப் பிரித்திருந்தார்கள். அங்குள்ளவைகளைக் காண ஜனங்கள் திரள்திரளாகக் கூடினர். பல பள்ளிகளில் இருந்தும் மாணவ மாணவிகள் வந்திருந்தனர். ஆகையால் எல்லாப் பிரிவுகளிலும் வரிசையில் நின்று பார்க்கவேண்டிய நிலை ஏற்பட்டது. இவ்வாறு இருக்கையில் எங்கள் வகுப்பில் உள்ள பிள்ளைகள் யாவரும் இந்தக் கண்காட்சியைக் காணச் சென்றோம்.

நாங்கள் இங்கிருந்து மெடிக்கல் கல்லூரிப் பள்ளியின் பஸ் மூலம் அவ்விடத்திற்குச் சென்றோம். சென்றதும் முதல் முதலாக இரத்த பாங்க் முதலியவைகளைப் பார்த்தோம். அங்கு மனிதனது எலும்புக்கூடு, தேக அமைப்பு, நுரையீரல், இருதயம் போன்றவைகளை மருந்துகள் போட்டுக் கண்ணாடிப் பெட்டியில் வைத்திருந்தனர். இருதயத்தின் உள்பாகம் வெளிப்பாகம் ஆகியவைகளையும் அதன் கைப்பிடி அளவையும் கண்டோம். நுரையீரல்களையும் அதன் சிறு காற்றறைகளையும் கண்டோம். இருதயத்தில் இருந்து இரத்தம் தமனி மூலம் செல்வதையும் மற்ற சிரை, தந்துகிபோன்ற ரத்தக் குழாய்களையும், நல்ல ரத்தத்தின் நிறத்தையும், அசுத்த ரத்தத்தின் நிறத்தையும் ரத்தம் உடல் முழுவதையும் சுற்றி வருவதையும் கலர் பல்புகள் மூலமாகப் படத்தில் காண்பிக்கப்பட்டிருந்தன.

பின்னும் மனிதனின் நாடித் துடிப்பு, இருதயத் துடிப்புக்கு ஒத்திருப்பதைக் காண்பித்தனர். பின்னர் ரேடியோ போன்ற கருவியின் மூலம் சில பிள்ளைகளின் இருதயத்துடிப்பைப் பெரும் சப்தமாகக் கேட்கச் செய்தனர். பின்னர் தவளையைக் கொன்று அதன் இருதயத் துடிப்பைக் காட்டினார்கள். பின்னர் இருதயம், மார்பறை போன்ற உறுப்புக்களின் 'எக்ஸ்ரே' எடுத்து வைக்கப்பட்டிருந்தன. எக்ஸ்ரேயின் பலவிதங்களைக் காட்டி அதில் சரியானவைகளையும் காட்டினார்கள். பிறகு ஒரு பிணத்தையறுத்து வைக்கப்பட்டிருந்தது. அதில் நோயாளியின் இருதயம் பெரிதாக வீங்கி இருப்பதையும், நோயற்றவனது இருதயம் சிறிதாகவும், அவன் கைப்பிடியளவு உள்ளதையும் காண்பித்தனர்.

பிறகு மூளையைப் பற்றிய பாகங்களைக்காண்பித்தனர் மூளை நரம்புகள் கண்ணுடனும் கழுத்துடனும் இணைத்துள்ளதையும், சிறிய ரத்தக் குழாய்களையும், உணர்ச்சி நரம்புகளையும் பார்த்தோம். மூளையானது தேகத்தின் முக்கிய உறுப்பாதலால் அது மண்டை ஓட்டின் மூலம் பத்திரமாக காக்கப் பட்டிருப்பதையும் பார்த்தோம். அவை மிக நன்றாக வைக்கப்பட்டிருந்தன. பின்னர் ஒரு பெண்ணின் உடலை வைத்திருந்து அதன் எலும்புகளை மாத்திரம் காண்பித்தனர். அதில் கைகால் எலும்புகள் நன்றாகத் தெரிந்தன.

பிறகு கண்ணைப் பற்றிய பிரிவுகள் இருந்தன. அங்கு கண்ணில் சதை வளர்வதையும், சிறு புழுக்கள் சென்று முட்டையிட்டு வளர்ந்து கண் கெடுவதையும், மூளையின் கேட்டால் கண்கள் கெடுவதையும், இன்னும் பல ஆபத்துக்கள் ஏற்பட்டு கண்களை ஆபரேஷன் செய்வதையும் அதற்குப் பதிலாகக் கண்ணாடிக் கண்கள் வைத்திருப்பதையும் பார்த்தோம். அவ்வவ்விடங்களின் உறுப்புக்களைப் பற்றி அறிந்த டாக்டர்கள் இருந்து அவைகள் இன்னின்னவை என்று எடுத்துக் கூறினார்கள். கண்கள் சரியாக உள்ளனவா என்று அறியப் பல வித நிறங்கள் கொண்ட சக்கரம் ஒன்று இருந்தது அதைச் சுற்றச் செய்து நிறத்தைக் கூறும்படி செய்தார்.

பின்னர், ஆரோக்கியத்திற்கான வசதிகளையும், நோய் வருவதற்கான கிருமிகளையும் பெரிய அளவில் கண்ணாடியில் வைக்கப்பட்டிருந்தன. கொசு, ஈ, மூட்டைப்பூச்சி, பேன் தெள்ளுப்பூச்சி போன்றவைகளை அழிக்கும் முறைகளையும், அவைகள் நோயைப் பரவச் செய்வதைத் தடுக்கும் முறைகளையும் காண்பித்தனர் தவளை, மீன் போன்றவைகளின் எலும்புகளையும், தும்பி, பறவைகளின் எலும்புகள் போன்றவைகளையும் வைத்திருந்தனர்

அங்கு ஒரு அறையில் ஒரு உண்மையான இறந்த மனிதனது பிணம் வைக்கப்பட்டிருந்தது. அதைத் திராவகம் மூலம் கெடாமல் வைத்திருந்தனர் அதிகநாள் ஆனதால் தோல் கருத்து, சுருங்கி இருந்தது. அந்த மனிதனது மண்டையைப் பிளந்து மூளை இருந்த இடத்தைக் காண்பித்தார்கள். மற்றும் மார்பு பாகத்தில் சிறிது அறுத்து இருதயம், நுரையீரல் போன்றவைகளை ஒரு டாக்டர் கோலால் தொட்டுக் காண்பித்தார். அங்கு ஆப்ரேஷனுக்கு வேண்டிய கருவி போன்றவைகளை



The ethical, ophthalmic services available today, result from the persistent study and extensive scientific training of the professional men who devote their lives to eye care. These men provide the professional skill and services that your priceless sight demands.

Expert Ophthalmic Service by

Messrs. RADHA BROS.,

OPHTHALMIC OPTICIANS

No. 174, BROADWAY :: MADRAS.

வைத்திருந்தனர். செவிலிகள் ஆப்ரேஷன் செய்யும் அறையில் முகமூடி அணிந்திருப்பதையும் பார்த்தோம்.

மற்றும் வெட்டுக்காயங்கள், சாதாரண முறிவு, இலகு முறிவு போன்றவைகள் ஏற்பட்ட கால்களும், கைகளும் வெகு நன்றாக காண்பிக்கப்பட்டிருந்தன. எலும்புகள் உடைந்து தசையைக் கிழித்துக் கொண்டு வெளிவந்துள்ளதையும் அதற்கு ஏற்ற சிகிச்சைகள், பாண்டேஜு முறைகள், கொம்பு போன்றவைகளை அதனுடன் கட்டி எலும்பை ஆடாமல் இருக்கச் செய்வது, போன்ற சிகிச்சைகள் வைக்கப்பட்டிருந்தன. காலில் வீக்கம், யானைக்கால் போன்றவைகள் வந்த கால்களை அங்கு வைத்திருந்தனர். கொக்கிப் புழு போன்றவைகளைக் காண்பித்தார்கள். நோயுற்றவனுக்கு வாயின் மூலம் உணவைச் செலுத்த வழியில்லாமல் மூக்கின் மூலம், நீர், உணவு போன்றவைகளைக் கொடுப்பதையும் காண்பித்திருந்தனர்.

இன்னும் சில இடங்களில் ரத்தத்தைப் பரிசோதித்து அதில் உள்ள நோய்க் கிருமிகளைப் பற்றியும் கூறினர். அங்கு வந்தவருள் பலர் தங்கள் தேகத்தைப் பரிசோதித்தனர். 'எக்ஸ்ரே' எடுத்தனர். இன்னும் உடலின் பல பாகங்களை வைத்திருந்தனர். சில குழந்தைகள் 4 மாதத்திலும், 8 மாதத்திலும் பிறந்ததையும், அவைகளின் உடலமைப்பையும் கண்டோம். 4 மாதக் குழந்தை பிறந்த போதே இருதயம் வெளி வந்துள்ளதையும் சில குழந்தைகளுக்கு இரண்டு தலைகள் ஒன்றாகச் சேர்ந்திருப்பதையும் பல விதமான அதிசயச் செய்திகளையும் காண்பித்தனர். இன்னும் பிரஸவ சம்பந்தமான இடங்கள் இருந்தன. அவைகள் பெரியவர்களுக்கு உள்ளதாகையால் எங்களுக்குக் காட்டப்படவில்லை. பல இடங்களில் உடலமைப்பைப் பற்றி 'படங்கள்' காண்பித்தனர். ஆனால் நாங்கள் அதைப் பார்க்கவில்லை.

மற்ற இடங்களைப் பார்ப்பதற்குள்ளாக இருட்டி விட்டது. ஆகையால் நாங்கள் அதையெல்லாம் பார்க்காமல் வீடு திரும்பினோம். இந்தச் சிறு பிரயாணம் எங்களுக்கு மிகுந்த சந்தோஷத்தைக் கொடுத்ததுமன்றி பள்ளிப் பாடங்களைப் பற்றியும் எங்கள் உடலின் வரலாற்றைப் பற்றியும் அறிய வாய்ப்பை அளித்தது.

P. S. குஞ்சம்மாள்,
(நான்காம் படிவம் 'இ' பிரிவு.)

பழங்களின் மகாநாடு

அப்பொழுது நாடு சுதந்திரம் அடைந்த சமயம். மனிதர்களுக்கு மட்டும் சுதந்திரமில்லை; நமக்கும் சுதந்திரம் உண்டெனப் பழங்களெல்லாம் கூடிப் பேசின. ஆனால் இவ்விஷயத்தை எவ்வாறு எல்லோரும் அறியச் செய்வது என்று அவைகளுக்குப் புலப்படவில்லை. உடனே மாம்பழம் எழுந்து, "நமக்குள் ஏன் வீண் விவாதம், நாமும் மனிதர்களைப்போல் பொதுக் கூட்டம்போட்டு அங்கு நம் சுதந்திரத்தைப்பற்றியும், மற்றும் பல விஷயங்களைப்பற்றியும் அறிவிக்கலாம்" எனக் கூறிற்று.

அடுத்த செவ்வாய்க்கிழமை அந்த வனத்திலுள்ள சகல கனிகளும் கூட்டத்திற்கு வந்தன. எல்லோரும் வந்த பிறகு மூன்று மாம்பழங்கள் மிக்க இனிமையாகக் கடவுள் வாழ்த்துப் பாடின. பிறகு காரியதரிசி தக்காளிப் பழம், தலைவர் பலாப்பழத்துக்கு மாலை போட்டு வரவேற்றது.

பிறகு அங்குள்ள பழங்கள் ஒவ்வொன்றும் எழுந்து தங்கள் குறைகளை வெளியிட்டன.

மாம்பழம்: என்னை மனிதர்கள் வரவர அடியோடு மறந்து விடுகிறார்கள். என் போன்ற நிலையில் இப்பொழுது யாராவது இருந்தால் தற்கொலை செய்து கொள்வார்கள். என்னை முன்பெல்லாம் கணக்கற்ற ரூபாய்கள் செலவழித்து வாங்குவார்கள். ஆனால்இப்பொழுதுகாலணாவிற்கு ஒரு ருமானி மாம்பழம் விற்கிறார்கள். முன்பு வீட்டிற்கு ஒரு மாமரமாவது இருக்கும். ஆனால் இப்பொழுது இருக்கும் மரத்தைக்கூட வெட்டிவிடுகிறார்கள். அதிலும் என்னிடத்தில் உயிர்ச்சத்து 'A'யும், நார்ப்பொருளும், சர்க்கரையும் இருக்கிறது என்பதை மனிதர்கள் அடியோடு மறந்து விடுகின்றனர் எனக்கூறிக் கண்ணீர் விட்டு அழுதது.

உடனே, வாழைப்பழம் எழுந்து " அண்ணா, உன்னைவிட எங்நிலை இன்னும் மோசமாகிவிட்டது. நான் கடவுளுக்குக்கூட பஞ்சாமிர்தமாக இருந்தேன். இப்பொழுது என்னை வாங்குவாரில்லை. அத்தி போன்ற பழங்களைப் பதப்படுத்தி விற்கிறார்கள். மக்கள் அவற்றையே விரும்பிவாங்குகிறார்கள். என்னை விரும்பாவிட்டாலும் பரவாயில்லை. என்னிடம் உள்ள உணவுச் சத்துக்களை அல்லவா பாழாக்குகிறார்கள்? இதைத்தான் என்னால் சகிக்க முடியவில்லை" என்று கூறியது.

JAYAM'S PUBLICATIONS.

UNION READER	I to IV Forms	
SOCIAL STUDIES	I to VI Forms	
GENERAL SCIENCE	I to VI Forms	
GENERAL MATHS.	I to VI Forms	
COMPOSITE MATHS.		
in Tamil	V & VI Forms	
in English	V & VI Forms	

Books for Elementary and Higher Elementary Schools and for Library are also available.

JAYAM & CO.,
NUNGAMBAKKAM
MADRAS 6.

பிறகு பேரீச்சம் பழம் எழுந்து, "என்னிடத்தே உள்ள இரும்புச்சத்தினை இந்த மானிடர்கள் அறியாமல், அயல்நாட்டுப் பழமாகிய திராட்சையையே விரும்புகின்றனர். நான் இப்பொழுது மார்க்கட்டில் மலிந்துவிட்டதால் மக்கள் என்னை வாங்குவது கேவலம் என்று எண்ணி அதிக விலை கொடுத்துத் திராட்சையையே வாங்குகின்றனர்." என்றது.

பிறகு சாத்துக்குடி, பம்பளிமாசு முதலிய பழங்கள் எழுந்து, மிகவும் உருக்கத்துடன் பேசின. "இப்பொழுது மனிதர்கள் எங்களை விரும்புவதில்லை, ஏனெனில் அயல்நாட்டு ஆப்பிளை மிகவும் விரும்புகின்றனர். எங்களிடத்தே உயிர்ச்சத்து 'C'யும், நார்ப்பொருளும், சர்க்கரையும் இருக்கின்றன. இதை மனிதர்கள் அறியவில்லை." எனக் கூறின

பிறகு, முந்திரிப்பழம், வாதுமைப் பழம், வெள்ளரிப்பழம், சீத்தாப்பழம், கொய்யாப்பழம், கொடி முந்திரி முதலிய பழங்கள் எழுந்து தங்களை மக்கள் சிறிதளவேனும் மதிப்பதில்லை என்றும், தங்களிடத்தும் உலோக உப்புச் சத்தும், உயிர்ச்சத்தும், சர்க்கரையும் இருக்கின்றன எனவும் கூறின.

பிறகு, அன்னாசிப் பழமும் முலாம் பழமும், "எங்களை அநியாயமாக அயல்நாட்டார் எடுத்துச்சென்று, எங்கள் மீதிருக்கும் தோலை எல்லாம் உரித்து, எம்மிடத்திலுள்ள உயிர்ச் சத்தைப் பாழாக்கி எம்மைத் துண்டுகளாக வெட்டி டின்னில் அடைத்து எம்மை இம்சிக்கின்றனர்." எனக் கூறி வருந்தின.

இம்மாதிரியே சப்போட்டாவும், மற்றும் சில பழங்களும் எழுந்து கூறின. உடனே பரங்கிப் பழம் எழுந்து, "ஏனம்மா மாதுளையே, உன் குறைகளை எல்லாம் தலைவர் பலாப்பழம் அண்ணாவிடம் சொல், நம் குறைகளை எல்லாம் தீர்ப்பார்." என்றது.

உடனே மாதுளை கன்னம் சிவக்க, சிவந்த முத்துப் பற்கள் தெரிய சிரித்துவிட்டு, "எல்லோரைப் போன்று எனக்கும் குறையுள்ளது. இரத்த விருத்திக்கு நான் அவசியம் என்பதை மக்கள் அறிவதில்லை." எனக் கூறியது.

இவற்றை எல்லாம் கேட்டப் பலாப்பழம் தனக்குப் போட்ட மலர் மாலையைக்கழற்றி அருகிலிருந்த பனம் பழத்திடம் கொடுத்துவிட்டுப் பின் ஒரு கனைப்புக் கனைத்து மூக்குக் கண்ணாடியைச் சரிசெய்துக் கொண்டு பேச ஆரம்பித்தது.

"இங்குக் கூடியிருக்கும் சகோதர சகோதரிகளுக்கு நான் என் வணக்கத்தைத் தெரிவிக்கிறேன். உங்கள் குறைகளை எல்லாம் கேட்டேன். எனக்கு மிக மன வருத்தமாய் இருக்கின்றது நமக்குச் சுதந்திரம் வந்தும் பயனில்லை. நம்மைஎல்லாம் மனிதர்கள் விரும்பாமல் ஆப்பிளையும் திராட்சையையும், அத்தியையுமே விரும்புகின்றனர். நாம் மக்களுக்கு என்ன தீங்கு செய்தோம்? நம்மிடமும் உலோக உப்புச் சத்துக்களும், உயிர்ச் சத்துக்களும், நார்ப்பொருளும் இருக்கின்றன. நம்மை உட்கொண்டாலும் உடலின் முக்கிய வேலைகள் சரிவர நடைபெறுவதற்கும், உணவுக் குறையினால் ஏற்படும் பலவித வியாதிகளைத் தடுக்கவும், இரத்தம் சுத்தீகரிக்கப் படவும், ஜீரணம் கழிவு நீக்கம் போன்றவை சரிவர நடைபெறுவதற்கும் உபயோகமாக இருக்கும். ஆகவே ஆப்பிள், திராட்சை, அத்திப்

பழம் போன்றவைகளை மாத்திரம் உண்பதைத் தவிர்த்து, நம்மையும் உட்கொள்ளுதல் அவசியம் என்பதை நாம் ஒத்துழைத்து மக்களனைவருக்கும் எடுத்துக் கூறுதல் அவசியம்." எனக் கூறி, தன் இனிய சொற்பொழிவை முடித்துக் கொண்டது.

உடனே பேரீச்சம் பழம் எழுந்து, " எடுத்துரைப்போம், எடுத்துரைப் போம், ஒத்துழைத்து நம் சிறப்பை மக்களனைவருக்கும் எடுத்துரைப் போம்." எனப்பாடியது.

பின், காரியதரிசி தக்காளிப் பழம் எழுந்து வந்தனோபசாரம் கூற, மாதுளம் பழம் தேசீய கீதம்பாட, பழங்களின் மகாநாடு இனிது முடிவடைந்தது.

T. C. ஈஸ்வரி,
(ஐந்தாம் படிவம் 'அ' பிரிவு)

இன்றியமையாத நான்கு நூல்கள்.

1. கழக ஆங்கிலத் தமிழ்க்கையகராதி : க அப்பாதுரை அவர்கள், எம். ஏ., எல். டி.
விலை ரூ. 3-4-0

2 கழகத் தமிழ்க்கையகராதி : கழகக் கல்வியறிஞர் குழுவினர்
விலை ரூ. 1-8-0

3. திருக்குறள் தெளிவுரை : டாக்டர் மு. வரதராசனார் அவர்கள்
விலை ரூ. 1-4-0

4 பிழைநீக்கி எழுதுமுறை : விலை அணா 0-3-0

மேற்கண்ட நூல்கள் ஒரே வகையில் 25 பிரதிகள் வாங்குவோர்க்கு 25%, 25 படிகட்குமேல் 30% கழிவு தரப்படும்.

சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிட்.
1/140, பிராட்வே, சென்னை 1.

Smt. C. H. RUKMANI AMMAL

Retired in September 1953 after her entire service in the school

காய்கறிப் பாட்டு

எண்ணி எண்ணி வாரோம்
எண்ணிக் காய் போடுங்கள்
கூடிக் கூடி வாரோம்
கொத்தவரங்காய் போடுங்கள்
ஆடி ஆடி வாரோம்
அவரைக்காய் போடுங்கள்
சொல்லி சொல்லி வாரோம்
சொரக்காய் போடுங்கள்
கத்தி கத்தி வாரோம்
கத்திரிக்காய் போடுங்கள்
பின்னிப் பின்னி வாரோம்
பீர்க்கங்காய் போடுங்கள்
சுற்றிச் சுற்றி வாரோம்
சுண்டைக்காய் போடுங்கள்
பாடிப் பாடி வாரோம்
பாகற்காய் போடுங்கள்

கதம்ப மாலே

கையிலிருப்பது காசு
நம்மைக் கடிப்பது கொசு
அவன் பெயர் வாசு
கண்ணில் விழுவது தூசு

வாத்தியத்தில் சிறந்தது வீணை
கடவுள் நமக்குத் துணை
கத்தி தீட்டுவது சாணை
மோரில் எடுப்பது வெண்ணை

காலையில் கரைவது காகம்
எனக்குப் பிடித்தது நீலம்
சூரியன் கொடுப்பது வெளிச்சம்
வீட்டில் சுடுவது அப்பம்

P. *செல்வ ராணி,*
(நான்காம் படிவம் 'ஆ' பிரிவு.)

தந்தி : " DESIGNS "   போன் : 3291

இம்மாதிரியான அழகான, அபூர்வமான அநேகவித நவீன ஜிகினா, எம்ராய்டரி, ஊசி வேலைகளை யெல்லாம் நாங்கள் செய்கிறோம். இந்தியாவின் பல பாகங்களிலும் உள்ள ராணியரும், நாகரிக நங்கையரும், சினிமா நக்ஷத்திரங்களும் இவற்றை விரும்பி வாங்கி



அணிகிறார்கள். பல ஸ்டூடியோக்களுக்கு நூற்றுக் கணக்கில் எங்களிடமே ஆர்டர் கொடுக்கிறார்கள். ஒரு முறை எங்கள் காரியாலயத்திற்கு வந்து பாருங்கள். அப்பொழுது தெரியும் எங்கள் வேலையின் பெருமை

கூச் பீஹார் மஹாராணி சாஹேபாவால் நற்சாட்சிப் பத்திரம் அளிக்கப்பட்டு, சிபார்சு செய்யப்பட்டது.

பி. எஸ். எம்ப்ராய்டரி ஒர்க்ஸ்

131, தங்கசாலைத் தெருவு,
சௌகார்பேட்டை, சென்னை.

பார்க்பேர் கண்காட்சியில் ஜி. டி. நாயுடுவின் விஞ்ஞானக் கலையின் சிறப்பு

இத்துறையில் முன்னேறுவதற்கு படிப்பு அதிக அவசியமில்லை என்றும், மன ஊக்கமும், உழைப்பும், ஆர்வமும் தான் தேவை என்றும் ஜி. டி. நாயுடு காண்பித்திருக்கிறார். இவர் அதிகம் படித்தவரல்ல. அங்குக் காணும் காட்சி யிலிருந்து இது தெளிவாகிறது

முதலாவதாக மின்சாரம். அதி லுள்ள எலெக்ட்ரிக் மோட்டார் ஒரு ஹார்ஸ் பவரிலிருந்து (H. P) எத்தனை யோ ஹார்ஸ் பவர் மோட்டார் செய்ய லாம் என்று தெரிகிறது.

சில மணி நேரத்தில் ஒரு மாண வன் ஒரு ரேடியோவை செய்யலாம். இந்தப் பாடத்தை படிப்பதற்கு 6 வாரங்களே போதும்; பல வருடங் களும் ஆயிரகணக்கான ரூபாய்களும் தேவையில்லை

மின்சார சக்தியினால் எப்படி சமையல் சீக்கிரத்தில் செய்யலாம் என்ற பகுதி இருக்கிறது. பாலில் இருந்து வெண்ணையைத் தனியாகப் பிரிக்கும் கருவி இருக்கிறது. தேங் காயைத் திருக, சப்பாத்தி, சேமியா, செய்ய, முட்டை அவிக்க, காய்களை துண்டு பண்ண, மற்றும் பல செய்ய மின்சாரக் கருவிகள் இருக்கின்றன. மின்சார அடுப்பு இருக்கிறது. தோ சைக்கும், இட்டிலிக்கும் மாவு அரைக் கவும், செய்யவும் மின்சாரத்திலேயே கருவிகள் இருக்கின்றன. ஆரஞ்சு பழச்சாறு பிழிய இரண்டு வகையான கருவிகள் இருக்கின்றன. காப்பி போடவும் மின்சாரத்திலேயே கருவி இருக்கிறது.

ஒரு பேஸின் இருக்கிறது. அதி லுள்ள தண்ணீரில் துணியை அலசி பருத்தியிலிருந்து கொட்டை நீக்கும் கருவியைப்போல, ஒரு கருவி இருக் கிறது. அதில் கொடுத்தால், மறுபுறம் தண்ணீர் பிழியப்பட்டு துணி வரு கிறது. பிழியப்பட்ட தண்ணீரெல் லாம் மறுபடி பேஸினில் விழுகிறது. மின்சாரத்தினாலேயே ஆகாரங்களைக் குளிர்ச்சி அடையச் செய்யும் கருவி இருக்கிறது. சாப்பிடும் மேஜையின் மேல் வைக்கும் மின்சார விசிறி இருக் கிறது. இது மெதுவாகத் தான் சுற்றும். ஏனெனில், ஆகாரங்கள் ஆறிவிடாமல் இருப்பதற்காக. ஊட்டி முதலிய குளிர் பொருந்திய நாடுகளில் வீட்டில் உஷ்ணமாக இருப்பதற்கு ஒரு கருவி இருக்கிறது. இதில் சிகப்பு பல்பு தான் இருக்கிறது. ஆனாலும், இது உஷ்ணமாக உள்ளது தரையைப் பெருக்க கருவி ஒன்று இருக்கிறது. அதில் ஒரு கோணிப்பையைப் பிணை த்து இருக்கிறார்கள். தரையில் அக்கரு வியைத் தேய்க்கும்பொழுது தரையி லுள்ள தூசிகளெல்லாம் அப்பை யினுள் செல்லுகின்றன. மரக்கட் டையில் சன்னல் ஒன்று மாதிரிக்காகச் செய்து வைத்திருக்கிறார்கள். அந்த மாதிரி சன்னல் திறந்திருந்தால் மழை பெய்யும்போது அத்தண்ணீர் பட்டால் உடனே தானாக மூடிக்கொள்ளும்.

பேப்பரின் கன பரிமாணம் கண்டுபிடிக்க ஸ்க்ரு கேஜ் இருக் கிறது. பேனா செய்தல், பேனா நிப் செய்தல், பிளேட் செய்தல் முதலியவை இருக்கின்றன. இவர்கள்.



The Present Cabinet 1953—54.

செய்யும் பிளேட் சுமார் ஒரு வருடத்திற்கு உடையாமல் இருக்கும்.

ரேடியோ பல விதங்களில் பல விதமாக செய்யப்பட்டு உள்ளன. இந்தியாவிலுள்ள நிலையங்களைத் தவிர உலகத்தில் உள்ள எல்லா ஒலி பரப்பும் நிலையங்களையும் இவற்றின் வாயிலாகக் கேட்கலாம். இந்த ரேடியோக்கள் ரேடியோவைபற்றி பயிலும் மாணவர்களால், சில மணி நேரத்தில் அல்லது 5 முதல், 8 மணி வரையில் செய்யப்படுகிறது. வீடுகளில் உபயோகிக்கும் விதம் தவிர சைகிளில் பொருத்தி அமைப்பதற்கேற்ப சிறிய அளவிலும் செய்யப்படுகிறது. சைகிளை ஓட்டிச் செல்லும்போது அதன் சக்கரத்தில் அமைக்கப்பட்டிருக்கும் டைனமோ வேலை செய்கின்றபோது மின் சாரம் உண்டாகிறது. இம்மின்சார சக்தியே ரேடியோவை இயக்க உதவுகிறது. இதுவரை மோட்டாரில் ரேடியோவைப் பொருத்தி அமைத்து வந்தார்கள். இப்போது சைகிளிலும் ரேடியோவை அமைத்திருப்பது திரு. ஜி. டி. நாயுடுவின் சிறந்த அறிவு நுட்பத் திறன்களில் ஒன்று. மற்றும் பல ரேடியோக்கள் இருக்கின்றன. சில ரேடியோக்கள் மெதுவாகப் பாடுபவை, சில அதிக சப்தத்துடன் பாடுபவை அங்கு எல்லா ரேடியோக்களும் பாடுகின்றன. ஆனால், நமக்கு அதிக சப்தத்துடன் பாடும் ரேடியோக்கள்தான் கேட்கிறது காற்றின் அழுத்தும் சக்தியைக் கொண்டு இயங்கும் இயந்திரம் இருக்கிறது. ஒலிப்பதிவு இயந்திரம் இருக்கிறது. புது விதமான ரிக்கார்ட் மாற்றிக்கொள்ளும் கிராமபோன் செய்து வைத்து இருக்கிறார்கள். தெருவில் இருக்கும் பெரிய கடிகாரங்கள் மாதிரி செய்கிறார்கள். அதற்கு மாதத்திற்கு ஒரு முறை சாவி கொடுத்தால் போதும். மற்றொரு கடிகாரம் இருக்கிறது. அக்கடிகாரத்தை ஜி. டி. நாயுடு ஸ்டாலிற்கு எதிரில் வைத்திருக்கிறார்கள். அது சதுரமாக இருக்கிறது ஒரு பெரிய கம்பத்தில் பொருத்தப்பட்டிருக்கிறது. இது பாரத்தினாலே ஓடுகிறது

எம். பிரமிளா,

(நான்காம் படிவம் 'இ' பிரிவு.)

"உணவால் நோயைத் தடுக்கலாம்"

'தற்போது எங்குப் பார்த்தாலும் யாரைப் பார்த்தாலும் ஏதாவது வியாதி என்று சொல்லாதவர்களே கிடையாது. வியாதி இல்லாத மனிதரைப் பார்ப்பதே அரிதாகப் போய்விட்டது. இந்தக் காலத்தில் வியாதி இல்லை என்று சொன்னாலே நாகரிகக் குறைவு என்று எண்ணிக் கொள்கிறார்கள் என்று என்னுடைய பாட்டி ஏதோ தனக்குத் தானே சொல்லிக்கொண்டிருந்தாள்.

பாட்டி சொல்வதும் வாஸ்தவம் தான். 'வியாதி வராமல் எப்படித் தடுப்பது ; என்ன செய்தால் வியாதி வராமல் தடுக்கலாம்' என்று யாரும் சொல்வதில்லை. வைத்தியரைக் கேட்டாலும் கூட, 'இதோ, இந்த மருந்தை வாங்கிச் சாப்பிடுங்கள் ; வியாதி குணமாகிவிடும்' என்றுதான் சொல்கிறாரே தவிர, வேறு ஒன்றும் சொல்வதில்லை வியாதி வராமல் எப்படித் தடுப்பது ? பெரிய பெரிய ஆராய்ச்சியாளர்களும், 'மருந்து சாப்பிடுவதினால் வியாதி குணமாவதில்லை. அது வெறும் மனப்பிரமை, வியாதி வருங்

கால் நாம் சாப்பாட்டில் அனுசரிக்கும் கட்டுப்பாடுகளே வியாதியைக் குறைக்கின்றன' என்று சொல்லுகிறார்கள்.

உணவு சாஸ்திர ஆராய்ச்சியாளர்கள் பெரும்பாலும் வியாதிகள் உணவுச் சத்துக் குறைவினால்தான் வருகின்றன வென்றும், அவ்வுணவுச் சத்துக்கள் நம் தினசரி ஆகாரத்தில் குறையா வண்ணம் நமது உணவுத் திட்டம் அமையவேண்டுமெனவும் கூறுகிறார்கள். மேலும், நமக்கு உடல் வளர்ச்சி, ஆரோக்கியம் இவைகளுக்கு வேண்டிய உணவுச் சத்துக்கள் பெரும்பாலும் கலப்பு உணவிலிருந்து தான் கிடைக்கின்றன எனவும் சொல்கிறார்கள்.

1912-ஆம் வருடத்தில் 'Hopkins' என்ற உணவு ஆராய்ச்சியாளர் கரி நீரகச் சத்து, புரதம், கொழுப்பு, உலோக உப்புச்சத்துக்கள், தண்ணீர் இவற்றையெல்லாம் செயற்கை முறையில் ஒன்று சேர்த்து ஒரு உணவாகத் தயாரித்து அந்த உணவை ஒரு பிரிவு வெள்ளை எலிகளுக்கு உணவாக அளித்தார். இந்த பிரிவைச் சார்ந்த வெள்ளை எலிகள் இந்த செயற்கை ஆகாரத்தை உட்கொண்டபோதிலும் சரியான வளர்ச்சி அடையவில்லை எனக் கண்டார். ஆதலால் மற்றொரு பிரிவு வெள்ளை எலிகளுக்கு அந்த செயற்கை உணவோடு சில துளி பாலைச் சேர்த்துக்கொடுத்தார். இப்பிரிவைச்சார்ந்த எலிகள் நல்ல வளர்ச்சி அடைந்தன என்பதையும் கண்டார். இப்பரிசோதனையிலிருந்து இயற்கையாகக் கிடைக்கும் பால் போன்ற உணவுப் பொருள்களில் உடலுக்கு இன்றியமையாத சில உணவுச் சத்துக்கள் இருக்கின்றன எனக் கண்டுபிடித்தார். இந்த உணவுச் சத்துக்கள்தாம்

A. C. K. CHARI & CO.

89, SULLIVANS GARDEN ROAD,
MADRAS 4.

A.C.K
Chari & Co.

We are the Manufacturers of Exercise Note Books, Drawing Note Books, Graph Note Books, Book-keeping Sets, Account-Note-Books and Shop-Act Register, at Moderate Competetive rates.

நம் உடலுக்கு முக்கியமானவை என அறிந்தார்.

இந்த உணவுச் சத்துக்களின் குறைவினால், 'ஸ்கர்வி,' 'பெரி-பெரி' போன்ற வியாதிகளும், நரம்புத் தளர்ச்சி, உடலில் ஓய்ச்சல், சுறுசுறுப் பின்மை, அசதி போன்ற வியாதிகளும் ஏற்படுகின்றனவென்றும் கண்டு பிடித்தார்கள். இந்த உணவுச் சத்துக்கள்தாம் 'வைட்டமின்ஸ்' அதாவது உயிர்ச்சத்துக்கள் என்றும் கண்டு பிடித்தார்கள். இந்த உயிர்ச் சத்துக்கள் 'A', 'B', 'C', 'D', 'E' என்று ஐந்து வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு உயிர்ச்சத்துக் குறைவினாலும் நமக்கு வியாதி ஏற்படுகின்றது.

இவ்வுயிர்ச் சத்துக்கள் நம் உணவுச் சத்துக்களுள் ஒரு பிரிவாகும். உணவுச் சத்துக்கள் ஆறு வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அதாவது நீரகச் சத்து, புரதம், கொழுப்பு, உலோக உப்புச்சத்துக்கள் அல்லது தாதுப் பொருட்கள், 'வைட்டமின்ஸ்' அல்லது உயிர்ச்சத்துக்கள், தண்ணீர் என்பனவாம். இந்த உணவுச் சத்துக்கள் யாவும் நம் உணவில் குறைவின்றி போதுமான அளவு இருந்தால் தான் நாம் நோயின்றி வாழ முடியும். இவைகளில் ஏதேனும் ஒன்று ஒரு சிறிது குறைந்தாலும்கூட நாம் பெரிதும் பாதிக்கப்படுகிறோம். இவ்வுணச் சத்துக்கள் நிறைந்த உணவுப் பொருட்களை நாம் நாடோறும் நம் உணவில் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

உடலுக்குச் சக்தி, உஷ்ணம், ஏற்பட கரிநீரகச்சத்து மிகவும் அவசியம். இவை நாம் தினசரி உட்கொள்ளும் அரிசி, கிழங்குகள், சர்க்கரைப் பொருட்கள் முதலியவைகளில் காணப்படுகிறது.

நாம் தீட்டாத அரிசியை உபயோகிப்பதனால் நமக்கு கரிநீரகச் சத்துடன் உயிர்ச்சத்து 'B' ம் கிடைக்கின்றது. உயிர்ச்சத்து 'B' இனங்கள் குறைவினால்தான் நரம்புத் தளர்ச்சி, வாய்ப்புண் முதலிய நோய்கள் ஏற்படுகின்றன. முழுப்பயறு வகைகள், வேர்க்கடலை முதலியவைகளிலும் உயிர்ச்சத்து 'B' இனங்கள் உள்ளன. இவைகளை நம் ஆகாரத்தில் சேர்ப்பதன் மூலம் நாம் இவைபோன்ற வியாதிகளைத் தடுக்கலாம்.

மேலும் நமக்கு நல்ல தோற்றம் ஏற்படவும், சக்தி, உஷ்ணம் இவைகளை அளிக்கவும் கொழுப்புச் சத்து மிகவும் அவசியமாகும். கொழுப்புச் சத்தானது நம் உடலில் சேமித்து வைக்கப்பட்டு நாம் பட்டினியாக இருக்கும் காலங்களில் நமக்கு வேண்டிய சக்தியை அளிக்கின்றது இச் சத்து கொட்டை வகைகளிலும், பால், வெண்ணெய், நெய், போன்றவைகளிலும், மேலும், முட்டை,, மீன் எண்ணெய் முதலியவைகளிலிருந்தும் கிடைக்கின்றது.

இந்த உணவுப் பொருட்களிலிருந்து உயிர்ச்சத்து 'A', உயிர்ச்சத்து 'D' இவைகளும் கிடைக்கின்றன. மற்றும் சில தாவர உணவுகளாகிய மா, பலா, பப்பளி போன்ற பழவகைகளிலும், கீரைகளிலும் உயிர்ச்சத்து 'A' கிடைக்கின்றது. உயிர்ச்சத்து 'A', நமது கண், தோல் இவற்றின் ஆரோக்கியத்திற்கும், ஜலதோஷம் முதலிய வியாதிகள் வராமல் தடுக்கவும் மிக்க அவசியமாகும். உயிர்ச்சத்து 'D' சூரிய ஒளிக்கதிர்களிலிருந்து நமக்குக் கிடைக்கின்றது. இதன் குறைவினால்

எலும்புகள் பாதிக்கப்பட்டு எலும்பு சம்பந்தமான வியாதிகள் உண்டாகின்றன. இந்நோய்கள் வராவண்ணம் திறந்த வெளிகளில் தேகப் பயிற்சி செய்தல் சிறந்ததாகும்.

நமது உடலில் தசைவளர்ச்சிக்கும் நம் உடலில் பொதுவாக வியாதிகளைத் தடுக்கும்சக்தி ஏற்படுவதற்கும் புரதச்சத்து இன்றியமையாததாகும். இது நமக்குத் தாவர உணவுகளாகிய பருப்புவகைகள்,கொட்டைவகைகள், கோதுமை, கொட்டைகளோடு கூடிய காய்கறிகள் முதலியவற்றிலிருந்து கிடைக்கின்றது. மிருக உணவிலிருந்து புரதம் மிக அதிகமாகக் கிடைக்கிறது. இது நம் ஆரோக்கியத்திற்கு மிகவும் இன்றியமையாததாகும். இச்சத்து கிடைக்கும் உணவுப்பொருட்களில்உயிர்ச்சத்துக்களும் அடங்கியுள்ளன. நம் சரீர வளர்ச்சிக்கு புரதம்தான் மிகவும் முக்கியமானது ஆகும். இது பெரியவர்களைவிட வளரும் பருவத்திலுள்ள குழந்தைகளுக்குத்தான் மிகவும் அதிகமாக வேண்டப்படுவதாகும்.

C. V. PARVATHI—Form VI

School pupil leader (1953—54).
I Prize-Winner in the Manavar Manram on Thirrukkural Competition.

ஆரஞ்சு, நாரத்தை, எலுமிச்சை முதலிய பழங்களில் உயிர்ச்சத்து 'C' நிறையக் கிடைக்கின்றது. எலுமிச்சம் பழம் நம் தினசரி உணவில் சேர்க்கப் படுவது மிக்க அவசியமாகும்.

கீரைவகைகள், காய்கறிகள், பழவகைகள் இவற்றிலிருந்து நமக்கு மிக்க அதிகமான உலோக உப்புச் சத்துக்கள் கிடைக்கின்றன. கீரைகள் சேர்த்துக்கொள்வதினால் நம் உடலில் மலச்சிக்கல் ஏற்படாமல் தடுக்கப்படுகின்றது. இவைகளின் மூலம் நமக்கு உயிர்ச்சத்துக்களும் கிடைக்கின்றன.

ஆதலால் நம்முடைய தேக ஆரோக்கியத்திற்கும், நம் உடலில் வியாதியைத் தடுக்கும் சக்தி ஏற்படுவதற்கும் நமக்கு எல்லா உணவுச் சத்துக்களும் மிக முக்கியமும், அவசியமுமாகும் என அறிகிறோம். அன்றுடம் நம் உணவில் பருப்புகள், தானியங்கள், கீரைகள், புதிய காய்கறி வகைகள், பழவகைகள் முதலியவற்றை நிறைய சேர்த்துக்கொள்ள வேண்டும்.

இவ்வாறு உணவுச்சத்துக்கள் நிறைந்த, இயற்கையில் கிடைக்கும் பலவித உணவுப் பொருட்களை உட்கொள்வதன் மூலம் பாட்டி சொல்வது போலல்லாமல், தற்கால நிலைமை முற்றிலும் மாறும் என்பதில் சந்தேகமே இல்லை.

ஆதலால் நமக்குக் கிடைக்கும் பல உணவுப் பொருட்களையும் பயன் படுத்திக்கொண்டு ஆரோக்கிய வாழ்க்கை நடத்துவோமாக!

T. K. **விஜயம்,**
(நான்காம் படிவம் 'அ' பிரிவு.)

CONNEMARA PUBLIC LIBRARY
10 DEC 1955
MADRAS

SCHOOL ANNUAL SPORTS

The Hon'ble Minister for Prohibition, Srimathi Jothi Venkatachellum giving away the prizes.

பால் பண்ணை

நானும் எனது பள்ளித் தோழியருள் சிலரும், எங்கள் உபாத்தியாயினியுடன், சென்னை ஐயனுவரத்தில் உள்ள பால்பண்ணைக்கு பால் சுத்தப் படுத்தும் விதத்தை அறிவதற்காகச் சென்றோம். அங்கு பாலை சுத்தப்படுத்தப்படும் விதத்தை அங்குள்ளவர் கூற நாங்கள் கவனமாய்க் கேட்டுக் கொண்டோம்.

பால் ஐயனுவரத்திலேயே கறக்கப்படுவதில்லை. அங்கிருந்து 40 மைல் தூரத்திலுள்ள கிராமங்களிலிருந்து பால் கறக்கப்பட்டு, டப்பாக்களில் அடைக்கப்பெற்று லாரிகளில், பண்ணைக்குக் கொண்டுவரப்படுகிறது. அவ்விதம் வந்த பால் சரியாக இருக்கிறதா அல்லது மாற்றுப்பொருள்களுடன் கலந்ததா என்பதை அறிய அங்கு வந்த பாலை பரிசோதித்து, அந்தப் பாலின் அடர்த்தியையும், பாலிலுள்ள கொழுப்பின் அளவையும் கண்டு பிடிக்கின்றனர்.

பாலின் அடர்த்தியை "லாக்ட்ரா மீட்டர்" என்னும் கருவியாலும், பாலில் கொழுப்பின் அளவை "ப்யூட்ரா மீட்டர்" என்னும் கருவியாலும் அளக்கின்றார்கள். பாலின் சராசரி அடர்த்தி 1.02 ஆகும். கொழுப்பின் அளவு பசும் பாலில் 5%ம் எருமைப் பாலில் 7%ம் இரண்டும் கலந்தால் 6%அல்லது $6\frac{1}{2}$%ம் இருக்கலாம். இவற்றிற்கு அதிகமாகவோ, குறைவாகவோ அந்த பால் இருக்குமானால் அதை பாலோடு சேர்க்காமல் பால் சம்பந்தமான பொருள்கள் செய்ய உபயோகிக்கிறார்கள். அவ்வாறு சோதிக்கப்பட்ட பால் சரியாக இருந்தால் அதை எடை

போட்டு வடிகட்டுகிறார்கள். வடிகட்டப்பட்ட பால் அவற்றிற்கு பக்கத்திலுள்ள ஒரு மூடிய தொட்டிக்குள் சென்று விழுகிறது. அந்தப் பாலை "பாஸ்டிரைஸ்டு" முறையில் சுத்தப்படுத்துகின்றனர்.

அந்த முறையைக் கையாளும் எந்திரத்திலே நான்கு குழாய்கள் ஓடுகின்றன. அந்தக் குழாய்களில் இரண்டில் இங்கு தொட்டியில் சேமிக்கப்பட்டிருக்கும் பால் ஓடுகிறது. மற்ற இரண்டில் ஒன்றில் சுடு தண்ணீரும், மற்றொன்றில் குளிர்ந்த நீரும் ஓடுகின்றன. அந்த இரண்டு குழாய்களும், பால் ஓடும் குழாய்களின் பக்கத்தில் ஓடுகின்றன. பால் முதலில் சுடுநீர் இருக்கும் குழாய்க்குப்பக்கத்தில்செல்கிறது. அவ்வாறு செல்கையில் அது 155°F வரை உஷ்ணம் அடைகிறது. பிறகு அது குளிர்ந்த நீர் இருக்கும் குழாய்க்குப் பக்கத்தில் வருகிறது. அதனால் உஷ்ணம் அடைந்த பால் மறுபடியும் குளிர ஆரம்பித்து 40°Fவரை குளிர்கிறது. பிறகு அது அங்குள்ள குழாய் மூலமாக அந்த எந்திரத்தை விட்டு வெளியே செல்லுகிறது.

HAMSA DAMAYANTHI Form III
I Prize-winner in the Manavar Manram Art Exhibition

இந்த எந்திரமானது ஒரு குறிப்பிட்ட அளவுள்ள பாலையே சுத்தம் செய்யும். அதனால் அதிகபால் உள்ளே செல்லுமானால் அந்த அதிகபால் மற்றொரு குழாயின் மூலமாக வெளிவந்து விடும். அதுவுமன்றி இந்த எந்திரத்திலேயே அமைக்கப்பட்ட ஒரு குறிமுள்ளானது, இந்த எந்திரம் தவறாக வேலை செய்யும்போது தன் அடியிலுள்ள வரைபடத்தில் குறிக்கிறது. இந்தத் தவறுகள் ஏற்படுவதாலும், பால் அந்த அதிக பால் வெளிவரும் குழாய் வழியாக வெளிவருகிறது.

சுத்தப்படுத்தப்பட்ட பால் டின்களில் அடைக்கப்பட்டு லாரிகளில் எல்லா டிவிஷன்களுக்கும் கொண்டு வரப்பட்டு எல்லோருக்கும் வழங்கப்படுகிறது.

S. சுந்தரி,
(நான்காம் படிவம் 'இ' பிரிவு)

कल की रात

मकरन्द पीकर मदमत्त होने के लिये कलियों के चारों और मधुप मंडराने लगे। मन्द समीरण लताओं को झुला रहा था। यह देखकर कमल-कलिकाएँ खिल-खिलाकर हँस रही थी। आदित्य अस्तगिरी की आड में छिपकर अपनी प्रियतमा के साथ आँख मिचौनी खेल रहा था। उसके लाल किरण वृक्ष-लताओं से गुज़रकर भूदेवि के लिये स्वर्णभूषण बन रहे थे। वृक्षों की डालियों पर बुल बुल चह चहा रहे थे। धीरे धीरे निशादेवी ने धरती माता को अपनी बाहुओं में समेटने लगी।

लीला अपने घर के पिछवाड़े के बगीचे में बैठकर पूरब से निकलती हुई चन्द्रमा की ओर निहारती बैठी थी। कमल का मुँह मुर्झा गया और कुमुदिनी विकसित हो गयी। चारों ओर का दृश्य बहुत सुहावना था। लीला चबूतरे से उठकर घर की ओर चली। उसके हृदय में नये नये विचार और विकार कलोले मारने लगे।

सारी दुनियाँ सो रही है। आसमान में तारों की बारात जा रही है। सूरज डूब गया। लेकिन रजनी अब चन्द्रमा की चाँदनी में नहा रही है। निद्रादेवी ने अपनी निश्शब्दता का राज चारों ओर फैलाया। लेकिन लीला के आँखों से नींद सदा के लिये गायब हो गयी थी। वह अपनी बेचैनी में भी इस सुहावनी चाँदनी रात की शोभा का अनुभव कर रही थी।

कल परीक्षा का फल आनेवाला है। लीला उसीकी चिंता में रात भर जागती रही। उसका दिल बेचैन हो रहा था। धीरे धीरे चन्द्रमा डूबने लगी और तारे भी एक एक कर ओझल हुए। सवेरा हो गया। लेकिन लीला लेटी ही रही और सोचती रही; न जाने कल को रात कैसी होगी। तब तक उसका छोटा भाई हाथ में अखबार लिये कूदते हुए आया और कहा 'दीदी तुम पास हो गई"

अब तो कल की रात कल की रात से भी ज़्यादा सुहावनी होगी।

V. Pramila.

परोपकार।

एक गाँव में एक बड़ा आदमी रहता था। उनकी कोई संतान नहीं थी। इसलिये वह लोगों को बहुत सहायता करता था। एक रोज भगवान श्रीकृष्णजी उसकी परीक्षा करने के लिये भिखारी के वेश में आये और बोले: 'मैं एक गरीब आदमी हूँ मैं क्या काम कर सकता हूँ ? मुझे कुछ खाने को दीजिये। बड़े आदमी बाहर आये। उन्होने देखा कि भिखारी के कपड़े फटे-पुराने हैं। बड़े आदमी बोले; आपको क्या चाहिए'। भिखारी बोला: मुझे बहुत भूख है। इसलिये खाने को कुछ दीजिये। बड़े

आदमी भिखारी को घर के अन्दर ले गया और घर में तरह-तरह की मिठइयाँ बनवाकर भिखारी को खिलाया । रात में सोने के लिये एक अच्छी जगह दी । भगवान श्रीकृष्णजी ने उसका गुण देखकर कहा: तुम बड़े आदमी हो । तुम्हारा गुण देखकर मैं बहुत खुश हूँ । तुमको क्या चाहिए । बड़े आदमी ने भगवान श्रीकृष्णजी को प्रणाम किया और बोला 'मुझे पुत्र संतान नहीं है । मुझे पुत्र संतान दीजिये' । भगवान श्रीकृष्णजी बड़े आदमी को पुत्र संतान देकर चले गये । इसलिये सब लोगों को दयालु होना चाहिए ।

राजकुमारि

अपराधी

एक समय सिंहवर्म नामक एक राजा था । वह धनुर्विद्या में प्रवीण था । इसलिये सब शत्रुओं को जीत लिया वह बडा सदाचारी था और अपनी प्रजा को बडे प्रेम से पालन करता था । उसकी प्रजा खुश थी और चैन से रहती थी । वह देश हरा-भरा था । कोई बीमारी नहीं थी । उस देश में पापी और दुष्ट बहुत कम थे ।

एक समय राजा जेलखाने देखने के लिए गया । वहाँ पाँच कैदि थे । राजाने उनके पास जाकर पूछा "किसके लिए तुम सब यहाँ रखे गये हैं ?"

तब पहला कैदि ने कहा—"महाराज, मैं ने कोई कसूर नहीं किया कारण के बिना ही मुझे यहाँ रखे हैं ।" दूसरे कैदि बोला, "राजन्, मैं ने भी कुछ नहीं किया था ।" तीसरे ने कहा—"मैं ने किसी को दुख न दिया ।" चौथा कैदि ने कहा—मैं अपने रिश्तेदारों के दुष्टता से कैद हुआ । मैं भी किसी को किसी तरह का कष्ट नहीं दिया । पाँचवाँ कैदि ने राजा के पैरों पर गिरकर कहा—"महाराज, माफ़ कीजिये । मैं ने चोरी की । उसी का दण्ड भोग रहा हूँ । इसे सुनकर राजा ने उसको अपने पास बुलाया और कहा—"तुम सच बोलते हो । तुम ही अपराधी हो । ये चार कैदी निरपराध हैं । तुम इनके साथ रहने लायक नहीं हो । इसलिये तुम बाहर चलो । वह कहकर राजा ने आखिरी कैदि को रिहा कर दी ।

सत्यमेव जयते ।

By B. Saroja.

మార్పు

కాలము ఎడతెంపులేని కాల్వ. దాని విలువ అమూల్యము. ఒకానొకప్పుడు ఆకులు, అలములు తినుచు, యిల్లువాకిలి ఎఱుగక అడవులయం దల్లాడుచుండిన మనకు ప్రజాస్వామ్యము లభించినది. ఒక రాయికి నింకొకరాయి రాచి నిప్పు తయారుచేయుటకుబదులు అతిసులువుగా అగ్గిపుల్లలు సహాయమున నిప్పును తయారు చేయుచున్నాము. ఆహారము పచనము చేయుట తెలియనిరోజులుండగా ఆహార పదార్థములు నిలువచేసుకొను విధాన ములుకూడా తెలిసినవి. వస్తువినిమయ పద్ధతినిగాక పలుదేశములనుండి పలు వస్తువుల తెప్పించుకొను తెఱవెఱింగితిమి. "కాశికి బోయినవాడు కాటికి బోయిన వ్వానితో సమానమన్న" సామెతకు నేడు తావులేదు. మానవుడు నీటియందు, భూమ్యాకసములందు విచ్చలవిడిగా తిరుగుటకు సదుపాయములేర్పడినవి. అచ్చు యంత్రములు, టెలిప్రింటర్, దూరదర్శిని (టెలిస్కోపు), టెలిగ్రాం, దూరశ్రవణము (టెలిఫోన్), రేడియో, టెలివిజన్, పెన్సిలిన్, మొదలగున వెన్నెన్నో మానవుడు కనుగొనగలిగినాడు. అంతేకాదు, మహామారణాయుధములైన యాటంబాంబులు మున్నగువాటినికూడా మానవుడు కనుగొనగలిగినాడు. ఇంతమార్పు ఒక్క రెప్పపాటున జరిగియుండలేదు. ఒక్కొక్క విషయమును తరచి ధీమంతులు జీవితముల త్యాగముఁ చేసియుండిరి. కొలంబసు, వాస్కోడిగామా, మాజిల్లాను మొదలగువారు సముద్రమార్గమున భారతదేశమును, వివిధ దేశములను కనుగొన్నప్పుడు పడ్డ శ్రమ చెప్పతరముగాదు. అట్లే ప్రజా స్వాతంత్ర్యమునకై జార్జి వాషింగ్టన్, అబ్రహామ్ లింకన్, వాల్టర్ రూసో, వుడ్రోవిల్సన్, మహాత్మా గాంధి, జవహరులాల్ నెహ్రూ మున్నగు మహాపురుషులు పడ్డపాట్లు లెక్కలేదు. ఉత్తమ సిద్ధాంతములను బోధించుటకై సర్వము త్యజించిన బుద్ధుడు, క్రైస్తు, తదితరులు చరిత్రలో తమనామములు సువర్ణాక్షరములతో లిఖించుకొనిరి. అట్లే వాఙ్మయమును ధధిని మథించి యుగయుగాంతరములవారికి వన్నెనందించిన, మిల్టన్, షేక్సిపియర్, భవభూతి, కాళిదాసు, కవిత్రయము, పోతన, శ్రీనాథుడు, ఠాగూరు, మొల్ల, పిరదౌసి, ఉమరఅలిషా, భారతి, కృష్ణశాస్త్రి, విశ్వనాథ, తిరుపతి వేంకటకవులు అనేక రచన లొనరించిరి.

ఇందరు త్యాగమూర్తులను, ఇన్ని మార్పులను సూక్ష్మబుద్ధితో పరిశీలించిన ప్రతివారికిని మేను గగుర్పాటు నొందక మానదు. ఒకప్పుడు కల్పించిన సౌకర్యములపై మనము ప్రాకులాడుచున్నాము. ఆశ్చర్యమైనది నే కనుగొన్నది ఒక్కటియును లేదాయని చింతించవలయును; సిగ్గు తెచ్చుకొనవలయును. నేనుకూడా వారిలో నొక్కటెను కావలయునన్న యాస ప్రతివారికిని యుండవలెను. ఉండుటయేగాక ఒక్క నిమిషమైనను వృథా

నేయక ఎప్పటికప్పుడు తనలో తాను "నే నానాడు నేర్చుకొన్న క్రొత్త విషయమెద్ది?" అని తర్కించుకొన్ననాడు తనలోనొక మహా విప్లవము బయలు దేరును. అది బయలు దేరిన నేదీ ఎదురొచ్చినను నాగము. తుదకు విప్లవకర్తకు ఉన్నత స్థానము లభించును. సాధారణ మానవునకును పరిశోధకునకును ముఖ్యమైన భేదములు రెండు కలవు. పరిశోధకుడు ప్రతివిషయమును అవగాహన చేసికొనుటలో దాని అంతరార్థమును గ్రహించును. సామాన్య మానవుడు బాహ్యార్థముతోడనే తృప్తిజెందును. రెండవది, పరిశోధకుడు నిగర్వి; అతనిది అతివిశాల దృష్టి; అది యెన్నడునూ శాశ్వతఫలితములమీద కురుకును. సామాన్య మానవుడు గర్వి. అతని దృష్టి సంకుచితము. అతడు తాత్కాలిక ఫలితములను మాత్రమే పొందుచున్నాడు. పరిశోధకుని యందు ఆసక్తి అనన్యసహానము. పట్టుదల, ఏకాగ్రత యనునవి సహజముగా నుండును. బుద్ధుని గన్నమాత్రాన బౌద్ధ బిక్షుకుడుగా మారిన నందుని మనస్సు పరిశోధకునిది. కాన మనము వల్లెవేయు పాఠములు పరీక్షల కేగాక యుగయుగాంతరముల కందించు మహత్తర విజ్ఞానార్జనకు తోడ్పడునుగాక!

రచయిత్రి:—బో. ఇందిరాదేవి

ఐదవ ఫారము P/C

స్త్రీలు ఎందులకు సంగీతము నేర్చుకొనవలెను?

కళలలో సంగీతము మొదటిది. దీనిని అందరు నేర్చుకొనవలెను.

కానీ సంగీతము సాధారణముగ అందరికిని సులభముగా రాదు. అట్లు వచ్చిన వారికి దేవుని కృపకలదని ఊహించుకొనవలెను. అందరును నాలుగు రాగాలు నాలుగు సినిమాపాటలు పాడవచ్చును. కాని అంతమాత్రమున సంగీతము బాగుగా వచ్చెనని దృఢముగా చెప్పజాలము. ఎందరో సినిమావారలు ఆకారము బాగుగానున్నను సంగీతజ్ఞానము లేకున్నారు. వారుకూడ సినిమాపాటలు బాగుగా పాడగలరు. అట్లున్నను వారికి వెనుకపాటలు మాత్రము యిచ్చుచున్నారు. ఎందులకు? వారికి సంగీతజ్ఞానము లేనందున.

పూర్వము ప్రతియొక్క స్త్రీ సంగీతము నేర్చుకోవలయునని పెద్దలు శాసించియుండిరి. కాలపరిస్థితులు మారుకొలది స్త్రీలు యిండ్లలోనేయుండి వేరు పనిపాట్లు లేకుండా సంగీతము నేర్చుకొన్న తమకు పొట్టకూడు రోజు రోజుకు గడుచుట దుర్లభమనియు, మరి ఏవో కారణములనుబట్టి సంగీతముపై అంత అభిలాష లేకుండా తమ తమ వృత్తిని చేయుటకు ఆరంభించుచు వచ్చిరి.

